விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 28 வியாழக்கிழமை (14.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 299

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# நத்தை வேகத்தில் மீள்குடியேற்றம்;

# அமைச்சர் பசிலுடன் பேச த.தே.கூ. திட்டம்



## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி அறிவித்துள்ளது. பேச்சுவார்த்தைக்காக நேரத்தை ஒதுக்குமாறு அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுவிக்கப்பட உள்ள தாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (18ஆம் பக்கம் பார்க்க)



## நாடாளுமன்றப் பதவி இரத்து வர்த்தமானியில் அறிவிப்பு

(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் நாடாளுமன்றப் பதவி இரத்தாகிவிட்டமை குறித்த அறிவிப்பு வெளிவந்துள்ளது. தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதற்குப்பதிலாக விருப்பு வாக்கின் அடிப்படையில் அவருக்கு அடுத்த இடத்தில் இருக்கும் (18ஆம் பக்கம் பார்க்க)

# சட்டவிரோத சுவரொட்டிகளைத் தேட மகிந்த சிந்தனை புத்தகமே கிடைத்தது

## சண்டே லீடர் ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

சண்டே லீடர் அச்சகத்தில் சட்டவிரோதமான சுவரொட்டிகள் அச்சிடப்படுவதாக கூறி பொலிஸார் அதனைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர். எனினும் அவ்வாறான சுவரொட்டிகள் எதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மாறாக ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரத்திற்காக அச்சிடப்பட்டிருந்த மகிந்த சிந்தனை புத்தங்களே அவர்களுக்குக் கிடைத்தன. அந்தப் புத்தகங்கள் பணத்துக்காக அச்சடிக்கப்பட்டன என சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பிரெட்றிக்கா ஜான்ஸ் தெரிவித்தார்.

கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெற்று வரும் வெள்ளைக் (18ஆம் பக்கம் பார்க்க)

## மர்மப்பொருள் வெடித்ததில் இயக்கச்சியில் இளைஞர் காயம்

பளை, இயக்கச்சிப் பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெற்றுள்ள பகுதியில் நேற்று மர்மப் பொருள் வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த பகுதியில் மீள்குடியேறியுள்ள நிலையில் தமது காணியை துப்புரவுசெய்து குப்பையைக் கொளுத்திக்கொண்டிருந்த சமயம் இந்த மர்மப் பொருள் வெடித்துள்ளது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த உமாமகேஸ்வரன் துளசிகரன் (வயது 17) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் உடனடியாகச் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (ச-5)

## ஐ.நா.சபையின் நிரந்தர பிரதிநிதி பிரான்ஸ் தூதுவராக நியமனம்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான முன்னைநாள் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி தயான் ஜயத்திலக மிகவிரைவில் பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது இலங்கை மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களில் சர்வதேசத்தை அமைதிப்படுத்துவதில் பாரிய பங்காற்றியவர் தயான் ஜெயத்திலக என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயினும் தனிப்பட்ட ரீதியில் அவர் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் சாதகமான அபிப் (18ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் சிங்கள மக்களின் மீள்குடியேற்றம் நடவடிக்கை இல்லாவிடின் போராட்டம்

## ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை

(கொழும்பு)

போர் காரணமாக வடக்கு கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்த சிங்கள மக்களை அரசாங்கம் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்காவிட்டால் அதற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் என ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு கிழக்கில் சிங்கள மக்களை மீள்குடியேற்றுவதற்காக தேசப்பற்றுடைய சமூகங்கள் அணி திரட்டப்படும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட 150 சிங்கள குடும்பங்கள் தற்போது யாழ்ப்பாண ரயில் நிலையம் மற்றும் துரையப்பா விளையாட்டரங்கு ஆகியவற்றில் தங்கியிருப்பதாக ஜாதிகஹெல உறுமய கட்சியின் ஊடகப் (18ஆம் பக்கம் பார்க்க)

## சரத்தின் விடுதலைக்காக தந்திப் போராட்டம்


(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தந்திகள் அனுப்பி வைக்கும் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்திற்கான மக்கள் அமைப்பினால் இந்தப் போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'மேன்மை தங்கிய ஜனாதிபதியே! முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யவும்' என அந்தத் தந்தியில் (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



உள்ளூராட்சி வார நிறைவு விழா திருநெல்வேலி பழங்கிணற்றுப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன், உள்ளூராட்சி உட்கட்டமைப்பு திட்டப் பொருளியலாளர் கே.சுரேன் ஆகியோர் உரையாற்றுவதையும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கு உள்ளூராட்சி திட்டப் பொருளியலாளர் கே.சுரேன் சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :- எஸ்.கரன்)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலங்கை வங்கி மேற்தரக் கிளையினர் நடத்தும் நவராத்திரி விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இக்கிளையின் முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இறைவணக்கத்தினையும் பூசை வழிபாட்டினையும் பிரம்மஸ்ரீ இலட்சுமி காந்தர் சத்தியோஜாதக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார்.

வரவேற்புரையை யாழ்.இலங்கை வங்கி மேற்தரக்கிளை பிரதான முகாமையாளர் அ.மகாதேவா ஆற்றுவார்.சமயச்சொற்பொழிவை ஆசிரியர் கு.பாலசண்முகன் நிகழ்த்துவார்.

அத்துடன் மேளக் கச்சேரியினை இணுவையூர் கலாபூசணம் சுந்தரமூர்த்தி குழுவினரும் நாதஸ்வர இன்குழல்வேந்தன் பி.எஸ்.பாலமுருகன் குழுவினரும் நடத்தவுள்ளனர். (ஸ்ரீ-2)

* * * * * * * * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் நவராத்திரி விழா இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு அளவெட்டி காமாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலையில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ப.இராஜகோபாலன் சிறப்பிக்கவுள்ளார்.

வரவேற்புரையினை ஆசிரியர் செல்வி அமுதினி ஆற்றுவார். நிகழ்வின் தலைமையுரையினை த.பிரதீஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

சிறப்புச் சொற்பொழிவினை 'அம்பிகை கடாட்சம்' என்ற தலைப்பில் கு.பாலசண்முகன் ஆற்றவுள்ளார். (ச-21)

## நகைகளின் அசல் தன்மைக்கு பொறுப்பளிக்கும் சான்றிதழ்

(கொழும்பு)

தங்கம், வெள்ளி, பிளாற்டினம் நகைகளை விற்பனை செய்வோர் அப் பொருட்கள் அசாலனவை என்பதை உறுதிப்படுத்தி பொறுப்பளிக்கும் சான்றிதழ் ஒன்றையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டும் என சுற்றாடல்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா கூறியுள்ளார்.

நகைகளின் கரட் அல்லது பி.பி.ரி. அளவு வர்த்தகக் குறியீட்டுச் சின்னம் மற்றும் விலை என்பவற்றை அச் சான்றிதழில் குறிப்பிட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுமார் 15 ஆயிரம் பேர் நகை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் இத்துறையில் வருடாந்தம் 10 பில்லியன் ரூபாய் பெறுமதியான வர்த்தகம் இடம்பெறுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## பசுப்பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலைக் கொள்வனவு செய்யத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கறவைப்பசு பால் உற்பத்தியாளர்களிடமிருந்தும் அவர்களது முழு உற்பத்திகளையும் கொள்வனவு செய்வதென யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளதாக யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

யாழ்.கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் கூடந்த 12 ஆம் திகதி மாலை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுடன் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஆகியன கலந்துகொண்ட கலந்துரையாடலின்போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கொள்வனவு செய்யப்படும் பால், கொள்வனவுச் சாலையில் வைத்து சுத்தம், கொழுப்பு வீதம் பரீட்சிக்கப்பட்டு பெற்றுக் கொள்ள இருப்பதால் தரமான பாலினை உரிய நேரத்தில் தந்துதவுமாறு பால் உற்பத்தியாளர்களை கேட்டுக் கொள்வதுடன் தரமற்ற பால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும் யாழ்.கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (ச-2)


### விற்பனைக்கு

வடமராட்சி பருத்தித்துறை வீதி வல்வெட்டித்துறை ஊறணி ஆஸ்பத்திரிக்கும் பொலிகண்டிச் சந்திக்கும் இடையில் பிரதான வீதியில் அமைந்துள்ள 3 1/2 பரப்புக் காணியும் வீடும் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

T.P : 07750997845

(2667)



### தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777

(சி/1384)



செல்லா சினிமா




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00



### கட்டிடம் வாடகைக்கு விடப்படும்

எமது சமாசத்துக்குச் சொந்தமான இல. 52, சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள 02 மாடிக் கட்டிடம் சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு :

021 222 5072

தலைவர்
வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)
இல. 52, சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம். (C-1407)


## மரண அறிவித்தல்

### முத்துக்கிருஷ்ணன் ஜானகி



கெருடாவில் தொண்டைமானாறை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்கிருஷ்ணன் ஜானகி கடந்த திங்கட்கிழமை (11.10.2010) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலன், கதிரி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற முத்துக்கிருஷ்ணனின் மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கெருடாவில்
தொண்டைமானாறு
0775399703
0774272359

தகவல் :
வீரகத்தி விவேகானந்தன்

(சி/1408)

## 37 ஆம், 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
10
10
1932

மறைவு
09
09
2010

சின்னத்தம்பி வைத்திலிங்கம்



தோற்றம்
10
02
1937

மறைவு
15
09
2010

வைத்திலிங்கம் இரத்தினம்

இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் (15.10.2010 ) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 12 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அமரர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

K.T.ஜெயராசா (றஞ்சன்)
ஆனந்தா வீதி, மானிப்பாய்.

(2674)

# இன்று ஒரு தகவல்

## நீச்சல்

"உங்களுக்கு குழந்தை பிறந்து 6 மாதம் ஆகிவிட்டதாமே. அதுதான் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். குழந்தை எங்கே? தொட்டிலில் தூங்குதா?" என்று கேட்டார் ஒருத்தர்.

"இல்லை. அது நீச்சல் பயிற்சிக்காகப் போயிருக்கிறது" என்றார் இன்னொருத்தர்.

இதைக் கேட்டவுடன் நீங்கள் ஆச்சரியப்படலாம். இது சாத்தியமா? என்றும் நினைக்கலாம்.

ஆறுமாதக்குழந்தைக்கு நீச்சல் பயிற்சியா? ஆமாம். சோவியத் ரஷ்யாவில் அப்படித் தான் நடக்கிறது. அவர்களெல்லாம் சின்னவயதில் பெரிய நீச்சல் வீரர்களாக ஆகிவிடுகிறார்களாம்.

ஒலிம்பிக்கிலும் 'நீச்சல்' ஒரு முக்கியமான போட்டி ஆகும். 1896 ஆம் ஆண்டிலிருந்து தான் நீச்சல் விளையாட்டையும் ஒலிம்பிக்கில் சேர்த்திருக்கிறார்கள்.

நம்மிலும் நீச்சல் தெரியாதவர்களெல்லாம் அதைக் கற்றுக் கொள்வது நல்லது.

ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நான் இந்த யோசனையைச் சொல்லவில்லை.

தப்பித்தவறி எங்கேயாவது தண்ணீரில் விழுந்து விட்டால் தப்பிக் கரைக்கு வந்து சேர்வதற்காகவாவது அது உபயோகமாக இருக்குமே.

அது மட்டுமல்ல!

உடம்பின் எடை குறைந்து, அழகாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் நீச்சல் பழகலாம். நீச்சல் அடிக்கும் போது உடம்பு முழுவதற்கும் ஒரு நல்ல பயிற்சி கிடைக்கிறது.

முக்கியமாக உடம்பில் இரத்த ஓட்டம் சீராக இருப்பதற்கு இது உதவுகிறது. நம் உடம்பில் ஏதாவது ஒருசில இடங்களில் இரத்தம் சரியாக பாயாமல் இருந்தால் அதனால் சில கோளாறுகள் வரும்.

அப்படிப்பட்ட கோளாறெல்லாம் வராமல் இருப்பதற்கு நீச்சல் பயிற்சி மிகவும் நல்லது. ஆண்-பெண் இரண்டு பேருக்குமே உடற்கட்டு நன்றாக அமைவதற்கு இது மிகவும் உதவியாக இருக்கிறது.

எந்த உடம்பு வலியாக இருந்தாலும் சரி, முதுகு வலியாக இருந்தாலும் சரி,கொஞ்ச நேரம் தண்ணியில் இறங்கி நீச்சல் அடியுங்கள். வலி பறந்து போய்விடும்.

வயிற்றுக் கோளாறு (மலச்சிக்கல்) சரியாகிவிடும். கொஞ்ச நேரம் நீச்சலடித்தால் நன்றாக பசியெடுக்க ஆரம்பித்து விடும். என்ன காரணமென்று நினைக்கிறீர்கள்?

வயிற்றில் தண்ணீர் அழுத்துதல்லவா,அதனால் செரிமான உறுப்புகளெல்லாம் நன்றாக வேலை செய்ய ஆரம்பித்து விடுகிறது.

தண்ணீர் நம் தோல் மீது தொடர்ந்து ஒரு அழுத்தத்தை கொடுப்பதனால்,தோலுக்கே ஒரு பளபளப்பு கிடைக்கிறது என்று வேறு சொல்கிறார்கள்.

இவ்வளவு பயன்கள் இருக்கும் போது அந்தப் பயிற்சியை எதற்கு விட்டு வைக்க வேண்டும்?

துணிந்து தண்ணீரில் இறங்க வேண்டியது தானே! நான் ஒருத்தரைப் பார்த்து, "நீச்சல் கற்றுக் கொள்ளுங்கள் சேர்" என்று சொன்னேன். அதற்கு அவர், "நான் ஏற்கனவே வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டுதானே சேர் இருக்கிறேன். இது வேறு தனியாக எதற்கு?" என்றார்.

அவர் ஏதோ கஷ்டத்தில் அப்படிச் சொல்கிறார் வேறொன்றுமில்லை.

அமெரிக்காவில் 1900 ஆம் ஆண்டு முதல் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் நீச்சல் கலையை ஒரு பாடமாகவே சேர்த்திருக்கிறார்களாம். அதற்காக பாடசாலையில் நீச்சல் குளங்களெல்லாம் கட்டி வைத்திருக்கிறார்களாம். மாணவர்களெல்லாம் அதில் தேர்ச்சி பெற வேண்டும். அப்பொழுதுதான் பாஸ்.

மற்றப் பாடங்களில் கொப்பியடித்து எழுதிவிடலாம் என்று தைரியமாக இருப்பவர்கள் கூட நீச்சல் கலையை கொப்பியடிக்க முடியாது. பயிற்சி இருந்தால் தான் பாஸாக முடியும்.

விலங்குகளுக்கெல்லாம் நீச்சல் இயற்கையாகவே தெரியும். ஒரு நாய்க்குட்டியைத் தூக்கித் தண்ணீரில் போடுங்கள். அது நீச்சலடித்து தரைக்கு வந்து சேர்ந்து விடும். அதெல்லாம் எங்கே போய்க் கற்றுக் கொண்டது நீச்சலடிக்க? மனிதன் மட்டும் தான் அதைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் ஒரு மனிதனுக்கு நீச்சல் தெரியுமா என்பதை அவனைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். அவனைத் தண்ணியில் தூக்கிப் போட்டுப் பரிசோதனை செய்து பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அப்படிச் செய்தால் நீச்சல் தெரிந்தவன் கரையைத் தேடி வந்து விடுவான். நீச்சல் தெரியாதவன் தரையைத் தேடிப் போய் விடுவான். கரைக்கு வந்து சேருபவன் உங்களையும் சும்மா விடமாட்டான்.

இப்பொழுது கடைசியாக இன்று ஒருதகவல். கைவசம் ஒன்று ரெடியாக இருக்கிறது. ஏதோ ஒரு பத்திரிகையில் படித்தது. வெளிநாட்டில் நடந்த ஒரு சம்பவம்.

ஒரு கணவன்-மனைவி-குழந்தை மூவரும் ஒரு நீச்சல் குளத்துக்குப் போனார்களாம்.

அந்த கணவர் குளத்தில் இறங்கி நீச்சலடிக்க ஆரம்பித்தார். குழந்தை," நானும் குளத்தில் இறங்க வேண்டும்" என்று அடம்பிடிக்க ஆரம்பித்தது.

அந்த அம்மா மிகவும் கண்டிப்பாக,"நீயெல்லாம் குளத்தில் இறங்கக் கூடாது என்று சொல்லி விட்டார்.

"அப்பா மட்டும் இறங்கலாமா. அவரை ஒன்றும் சொல்ல மாட்டேன் என்கிறாயே என்று குழந்தை. அதற்கு அந்த அம்மா, "அவர் இன்சூரன்ஸ் பண்ணியிருக்கிறார்" என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.மாநகர சபைக்குட்பட்ட 4 வீதிகளுக்கு புதிய பெயர்களை சூட்டுவதற்கு தீர்மானம்

மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஒரு வீதிக்கு ஏற்கனவே சூட்டப்பட்டிருந்த பெயருக்குப்பதிலாக வேறு பெயரையும் , பெயர் சூட்டப்படாதிருந்த 3 வீதிகளுக்கு புதிய பெயர்களையும் சூட்டுவது என யாழ்ப்பாணம் மாநாகர சபை ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோ. பற்குணராசா அறிவித் துள்ளார்.

வீதிப்பெயர் மாற்றம் மற்றும் பெயரிடப்படாத வீதிகளுக்கு பெயரிடுதல் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளை அடுத்து வழமையான நடைமுறைகளைப் பின்பற்றி வீதிப் ப்பெயர் மாற்றம் மற்றும் புதிதாக பெயரிடுதல் ஆகியன தொடர்பாக பத்திரிகை விளம்பரம் மூலமாக பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற ஆலோசனைகள் /ஆட்சேபனைகள் / ஒப்புதல்கள் போன்ற சபையின் மாதாந்தக்கூட்டத்தில் நன்கு பரிசிலிக்கப்பட்டு கீழ்க் காணும் விபரப்படியாக வீதிகளுக்கு பெயர்சூட்டுவது எனமுடிவுசெய்யப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய ,

✦ பருத்தித்துறை வீதியையும் , காங் கேசன்துறை வீதியையும் இணைக்கும் வீதிக்கு பாவனையில் இருந்த அரசடி வீதி என்ற பெயரை கார்த்திகேசன் வீதி எனப் பெயர் மாற்றம் செய்வது எனவும் ,

✦ பருத்தித்துறை வீதியையும், சங்கிலியன் வீதியையும் இணைக்கும் புதிய வீதிக்கு பண்டாரமாளிகை வீதி எனப் பெயரிடுவ தெனவும் ,

✦ கோவில் வீதியில் இருந்து துர்க்கா மணிமண்டபத்திற்கு தெற்குப் புறமாகச் செல்லும் சிறிய ஒழுங்கைக்கு செல்வநாயகம் ஒழுங்கை எனப் பெயரிடுவது எனவும்,

✦ பருத்தித்துறை வீதிக்கும் கோவில் வீதிக்கும் இடைப்பட்ட சட்டநாதர் வீதியில் வலப்பக்கமாகவுள்ள ஒழுங்கைக்கு சட்டநாதர் ஒழுங்கை எனப் பெயர் சூட்டுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரம் கௌரவ வடமாகாண ஆளுநரிடமிருந்து கிடைக்கப்பெற்றதும் இப்புதிய பெயர்களை பாவனைக் குட்படுத்துவதற்கான துரித ,நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தனங்கிளப்புப் பகுதியில் விடுவிக்கப்படாத நெல்வயல்களில் நெற்செய்கை மேற்கொள்வது சம்பந்தமான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பி.ப.4 மணிக்கு தபால்கந்தோர் வீதியில் அமைந்துள்ள விவசாய சம்மேளன பொருளாளர் ப. மகேஸ்வரன் இல்லத்தில் நடை பெறும் என்று விவசாய சம்மேளன செயலாளர் சி. புவனதாஸ் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)

## சிறப்பு பட்டிமன்றம்

வியாபாரிமூலை தோப்பு மணல் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய நவராத்திரி தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை இரவு 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக சொல்லின் சிகரம் பொன். சுகந்தன் தலைமையில் அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் பட்டி மன்றப் பிரிவினர் வழங்கும் சிறப்பு பட்டி மன்றம் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## இராசி பலன்

*14.10.2010*
*(புரட்டாதி 28, வியாழக்கிழமை)*
*சப்தமி மாலை 6.30 மணிவரை*
*பூராடம் பின்னிரவு 5.54 மணிவரை*
*இராகுகாலம் 1.32-3.02 மணிவரை*
*சுபநேரம் 7.32-9.02 மணிவரை*
*சரஸ்வதி பூசை ஆரம்பம்.*

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் ஏற்பட்ட வீண்பழிகள் மாறும், எதிரிகள் உங்களை விட்டு விலகுவர், தொழில் முன்னேற்றத்திற்கு பெரியோர் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. உடல்நலனில் கவனம் தேவை, பணப்பற்றாக்குறையுண்டு.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், இளமைக்கால நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**கடகம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், உடல் நலம் சீராகி பயணத்தால் பலன் கிடைக்கும், அயலவருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும், பிரபலமானவர்களின் சந்திப்பு கிட்டும்.

**சிங்கம்** மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு, பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறும், பூமியால் இலாபம் கிடைக்கும், புதிய நபர்களின் சந்திப்புண்டு

**கன்னி** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், ஆடை ஆபரண சேர்க்கையுண்டு, தூரத்து சொந்தங்களால் நன்மை கிடைக்கும், வம்பு வழக்குகள் தீரும், சிந்தனை மிகுதியுண்டு.

**துலாம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், பழைய பாக்கிகள் திடீரென வசூலாகலாம், சகோதரர்வழி நன்மைகள் வந்து சேரும், பொருளாதாரம் திருப்திகரமாக அமையும், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தினரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள், திடீர் பயணம் தித்திக்க வைக்கும், பெரியோர் வீடு தேடி வருவர், விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு** சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள், தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர், வெளியூர் பயணமொன்று கைகூடலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு

**மகரம்** சுபவிரயம் ஏற்படும் நாள், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், உறவினர் வீட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குரு வழிபாடு காரிய வெற்றியைத் தரும்.

**கும்பம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், சமயோசிதப் புத்தியால் எல்லோரையும் கவருவீர்கள், அந்நிய தேசப் பயணம் அனுகூலம் தரும், தொலைபேசி மூலம் பொன்னான செய்தி வந்து சேரும்.

**மீனம்** நம்பிக்கைகள் நடைபெறும் நாள், தொழிலில் புதிய அபிவிருத்தியினை முன்னெடுப்பீர்கள், சொத்து வாங்கும் முயற்சி கைகூடலாம், வசதிகளைப் பெருக்கிக் கொள்ள வள்ளல்களின் ஒத்துழைப்பு கிட்டும்.

வளவன்

## ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்ட கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாண லயன்ஸ் கழகம் எதிர்வரும் 24 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள ஐக்கிய நாடுகள் தினத்தை யொட்டி 15-20 வயதுக்கு ட்பட்ட மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

கட்டுரையானது ஐக்கிய நாடுகள் சபையின் நோக் கங்களும் அதன் சாதனைகளும் எனும் தலைப்பின் கீழ் 250-300 சொற்களுக்குள் அமையக் கூடியதாக இருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சிறப்பானது எனக்கரு தப்படும் 10 கட்டுரைகளுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இக்கட்டுரைகளை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக வே.ஞானகாந்தன் , அதிபர், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் , யாழ்ப்பாணம் அல்லது சி.மகாலிங்கம் , மூத்த விநாயகர் கோவில் ஒழுங்கை, ஆனைக்கோட்டை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என யாழ்ப்பாண லயன்ஸ் கழகம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | -- | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 50 |
| தக்காளி | 70 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 60 |
| கோவா | 70 | 70 | 80 |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 60 |
| பாகற்காய் | 150 | 140 | 90 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 |
| பயற்றங்காய் | 100 | 110 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 30 | 50 | 40 |
| கறிமிளகாய் | 80 | 110 | 60 |
| முருங்கைக்காய் | 180 | 100 | 120 |
| போஞ்சி | 150 | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 25 | 25 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40-45 | 30-35 | 40 |

# வாணிவிழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி சிறுவர் மன விருத்தி பாடசாலையின் வாணி விழா இன்று மாலை 2.30 மணிக்கு சிவபூமி பாடசாலை மண்டபத்தில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் ஆசியுரையை நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக விவசாயப்பீட உயிரியல் துறைத் தலைவர் கலாநிதி கு.மிகுந்தன் தம்பதியினரும் சிறப்பு விருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் கவிஞர் த.ஜெயசீலன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள் ளனர்.

கௌரவ விருந்தினர்களாக பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் கலாநிதி மனோன் மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர்.

அன்றைய தினம் இப்பாடசாலை மாண வர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற வுள்ளன. (ஸ்ரீ-2)

✠✠✠

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலக நவராத்திரி விழா கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் நாளை வெள்ளிக்கழமை காலை9.30 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெற வுள்ளது.

இவ்விழாவில் “ சொல்லடி சிவசக்தி” என்ற தலைப்பில் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுகன் சொற்பொழிவாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-24)

✠✠✠

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வாணி விழா நாளை மறு தினம் சனிக்கிழமை காலை10 மணிக்கு மன்றக் காரியாலயத்தில் சங்கத்தலைவர் வ.சிறீபிரகாஷ் தலைமையில் நடைபெறவுள் ளது.

இதில் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் கொடுக்கும்படி தலை வர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)

(யாழ்ப்பாணம்)

கம்பர்மலை பாரதி சனசமூக நிலையமும் உடுப்பிட்டி வடகிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் கம்பன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் வாணி விழாவும் கலைநிகழ்வுகளும் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு பாரதி சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் திருமதி கு.சுலோஜினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேசசபை செயலாளர் சி.வே. குலநாயகம் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக, கரவெட்டிப் பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.எஸ்.ஏ. ஐபார், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.உமாபாலன், கிளி/ சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ. சுப்பிரமணியம், யாழ். கம்பர் மலை வித்தியாலய அதிபர் கிருஷ்ணகுமார், உடுப்பிட்டி வடக்கு கிராம அலுவலர் கே. சந்திரமோகன் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர்.

அத்துடன் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ-2)

✠✠✠

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வாணிவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிலைய மண்டபத்தில் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சி.சிவகரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் ஏடு தொடக்கும் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ஸ்ரீ-29)




# தற்காலிக இணைப்பிலுள்ள முல்லை. வலய ஆசிரியர்களுக்கான சம்பளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட கல்வி வலயங்களில் தற்காலிக இணைப்பிலுள்ள முல்லைத் தீவு கல்வி வலய ஆசிரியர்கள் ஒக்டோபர் மாத சம்பளப் பட்டியலில் நாளையும் நாளை மறுதினமும் யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிமனையில் கையொப்பமிடலாமென முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் ஒக்டோபர் மாதத்தில் மீள ஆரம்பிக்கப்பட்ட விஸ்வமடு மகாவித்தியா லயம், கெற்பலியாறு தமிழ் மகா வித்தியால யம் மற்றும் வெட்டுவாய்க்கால் அ.த.க. பாடசா லைகளுக்கான சம்பளம் அவ்வவ் பாடசாலை அதிபரிடமே பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வடமராட்சி கிழக்கில் மீள்குடியேறிய மக்கள் அடிப்படை வசதிகளின்றி அவதி

(கரவெட்டி)

மீள்குடியமர்த்தப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்கள் அடிப்படை வசதிகள் இன்மையால் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின் றனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, அண்மையில் மாமுனையில் இருந்து ஆழியவளைப் பிரதேசங்களில் 9 கிராமங்களைச் சேர்ந்த 2ஆயிரம் குடும் பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். இவர்க ளின் கிணறு,மலசலகூடங்கள் போரினாலும் சுனாமியாலும் முற்றாக அழிந்த நிலையில் அவர்கள் தமது தேவைகளை நிறை வேற்றுவதற்கு பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

அங்கு தற்பொழுது உள்ள மலசல கூடங்கள் கதவு, கூரைகள் இன்றி திறந்த நிலையில் இருப்பதாகவும் கிடுகு, தடுப்புக்கள் மறைத்து பாவித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

இதனால் அதிகமான பெண்களும் குழந்தைகளும் பாதிப்படைந்துள்ளனர். இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாதிக்கப் பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (ஸ்ரீ-24)

# சிறுவர் , முதியோர் தினத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டி

யாழ்.நகர்மைய றோட்டறக்கட் கழகத் தால் சிறுவர்; முதியோர் தினத்தையொட்டி யாழ்.மாவட்டத்தில் கட்டுரைப்போட்டி நடத்தப் படவுள்ளது.

இக்கட்டுரைகள் “ சிறுவர் துஷ்பிர யோகமும் அது தொடர்பான விழிப்புணர்வும்”, “ சிறுவர் பாதுகாப்பில் நிறுவனங்களின் பங்களிப்பு”, “ நாளை நாங்களும் முதியவர் கள்” ,“ நாட்டில் முதியோர் இல்லங்களின் முக்கியத்துவம்” ஆகிய தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து 250-300 சொற்களுக்கு மேற்படாது எழுதப்படல் வேண்டும்.


இப் போட்டிக்கு வயதெல்லை கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.


கட்டுரைகளை தெளிவான கையெழுத்தில் எழுதி பெயர், விபரம் என்பவற்றைக் குறிப்பிட்டு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் ச.கஸ்தூரி,150 , ஆத்திசூடிவீதி கந்தர்மடம் எனும் முகவரிக்கோ அல்லது யோ.பிந்துஜா, 18-A, மூத்த விநாயகர் வீதி நல்லூர் எனும் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

தெரிவு செய்யப்படும் கட்டுரைகளில் மிகச் சிறந்த 3 கட்டுரைகளுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும் எனவும் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என்றும் கழகத் தலைவர் அறிவித்துள்ளார்.












கடந்த 2ஆம் திகதி அல்வாய் கலையகத்தில் நடைபெற்ற ஜீவநதிசஞ்சிகையின் வெள்ளி மலர் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் கி.விசாகரூபன், எழுத்தாளர் மேமன்கவி ஆகியோர் மதிப்பீட்டுரை நிகழ்த்துவதையும் ஜீவநதியின் பிரதம ஆசிரியர் க.பரணீதரன் ஏற்புரை நிகழ்த்துவதையும் தமிழ் நேசன் அடிகளார் வெளியீட்டுரை நிகழ்த்துவதையும் துணை ஆசிரியர் வெ.துஷ்யந்தன் நன்றியுரை நிகழ்த்துவதையும் அருகில் விரிவுரையாளர்களான க.திலகநாதன், பா.தனபாலன், இ.ராஜேஸ்கண்ணன் மற்றும் அதிபர் மா.நவநீதமணி ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# பொன்சேகாவின் குடியுரிமையை இரத்துச் செய்து விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதி ஆராய்வு?

(கொழும்பு)

சிறைத்தண்டனை பெற்றுள்ள சரத்பொன்சேகாவின் குடியுரிமையை இரத்துச் செய்துவிட்டு அவரை சிறையில் இருந்து விடுதலை செய்வதற்கான வழி வகைகள் குறித்து ஜனாதிபதி தனக்கு நெருக்கமான சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் மூலம் தகவல்கள் கசிந்துள்ளது.

சரத்பொன்சேகாவிற்கு விதிக்கப்பட்டுள்ள சிறைத்தண்டனை தொடர்பில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் பொதுமக்கள் எதிர்ப்பை கருத்தில் கொண்டே அவரை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதியின் கவனம் திரும்பியுள்ளது.

அதன் மூலம் பொதுமக்களின் எதிர்ப்பலையை தணிக்க முடியும் என்று அவர் கருதுவதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அப்படி விடுதலை செய்யப்படும் பட்சத்தில் சரத்பொன்சேகாவின் குடியுரிமை பறிக்கப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி தீவிர விருப்புக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

அப்படி நடக்கும் பட்சத்தில் அடுத்துவரும் 7 வருடங்களுக்கு பொன்சேகாவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகிக்கவோ தேர்தல்களில் போட்டியிடவோ முடியாத் நிலை உருவாகலாம்.

அதன் மூலம் அடுத்த ஜனாதிபதி தேர்தலின் போது அவர் ஜனாதிபதிக்கு எதிராக போட்டியிடுவது தடுக்கப்பட்டு விடும் எது எப்படியாயினும் தனது இரண்டாவது பதவிக்காலத்திற்கான சத்தியப்பிரமாணத்தின் பின்பே பொன்சேகா விடுதலை குறித்து சிந்திக்க முடியும் என்ற நிலைப்பாட்டிலும் ஜனாதிபதி உறுதியாக இருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே சரத்பொன்சேகாவின் சிறைத் தண்டனை குறித்த விடயத்தில் இருந்து மக்களை திசை திருப்பும் நோக்கில் நாடு தழுவிய ரீதியில் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களை இணைத்துக் கொண்டு ஜனாதிபதியின் இரண்டாவது பதவிப்பிரமாண நிகழ்வு குறித்து பாரிய பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் ஜனாதிபதி செயலகம் தீர்மானித்துள்ளது.

அதற்கென பல கோடி ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-2)

## பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத்துச் சம்பவங்களில் மூவர் பலி

மேல் கொத்மலை செயற்றிட்டத்திற்கு உட்பட்ட நீர்த்தேக்க பகுதியில் இருந்து ஒருவர் சடலமாக மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தலவாக்கலையைச் சேர்ந்த 29 வயதுடைய ராஜ்மோகன் அருள் என இனங்காணப்பட்டுள்ளார்.

இதேவேளை வவுனியா, மன்னார் வீதி இரண்டாம் கட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியானார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தமது வர்த்தக நிலையத்தில் இருந்து வீடு செல்லும் வழியிலேயே இவர் இந்த விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தில் உயிரிழந்தவர் தாழிக்குளத்தைச் சேர்ந்த 32 வயதுடைய சோமசுந்தரம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி கண்ணகி நகர் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியானார். உழவு இயந்திரம் ஒன்றும் ஈருருளி ஒன்றும் மோதியதாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. சம்பவத்தில் ஈருருளியில் பயணித்தவரே பலியாகியுள்ளதுடன் உயிரிழந்தவர் கண்ணகி பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய சின்னத்துரை பரமசீமன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கையர்கள் கைதானமையின் பின்னணியில் கனேடிய அரசாங்கம்

### கனேடிய தமிழ்க் காங்கிரஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தாய்லாந்தில் கடந்த 11 ஆம் திகதி இலங்கை அகதிகள் 155 பேர் கைது செய்யப் பட்டமைக்கு பின்னணியில் கனேடிய அரசாங்கம் இருப்பதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது. கனேடிய தமிழ் காங்கிரஸின் பேச்சாளர் டேவிட் பூபாலப்பிள்ளை இந்தக் குற்றச் சாட்டை சுமத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையினால் அகதிகளாக பதிவு செய்யப்பட்டவர்களும் கூட தாய்லாந்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கனேடிய அரசாங்கம் இந்த கைதுகளுக்கு காரணமாக இருந்ததாக குற்றம் சுமத்தியுள்ள அவர் கனடா, சர்வதேச கடமைகளை உதாசீனம் செய்ய முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்து அரசாங்கம் தொடர்ந்தும் இவ்வாறான துரதிர்ஷ்டவசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 2ஆவது பதவிக்காலத்தின் இலக்கு நாட்டின் துரித அபிவிருத்தியே!

## தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மத்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டாவது பதவிக்காலத்தின் தமது இலக்கு நாட்டின் துரித அபிவிருத்தியே என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொழிற்சங்கப் பிரநிதிகளுடனான விசேட சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எதிர்வரும் நவம்பர் மாதத்தின் பின்னர் நாட்டின் துரித அபிவிருத்தியை நோக்கிய பணயத்தின் தீர்க்கமான கட்டத்தில் நாட்டில் உள்ள தொழிலாளர் வர்க்கத்தினர் உட்பட அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பு அவசியம்.

அபிவிருத்தியடைந்துள்ள நாட்டை கட்டியெழுப்பும் போது ஒழுக்கம் மிக அவசியமானது ஒழுக்கமுள்ள பண்புள்ள பரம்பரையொன்றை உருவாக்குவதுடன் நாட்டை கட்டியெழுப்புவதற்கு நாட்டிலுள்ள தொழிலாளர் வர்க்கத்தின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக தொழிலாளர் வர்க்கத்தினர் புரிந்துணர்வுடன் செயற்படுவதையிட்ட ஜனாதிபதி தனது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

யுத்தத்தின் பின்னர் நாட்டை பாரிய அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வதற்கு இந்த அசாங்கத்திற்கு முடிந்துள்ளது. அடுத்த அபிவிருத்தியை நோக்கிய இலக்கை அடைவதற்குரிய திட்டங்கள் வகுக்கப்படுகின்றதுடன் அடுத்த 20 வருட காலத்துக்குரிய தேவைகளைப் பூரணப்படுத்துவதற்குரிய திட்டங்கள் முழுமையாக தயாரிக்கப்பட்டுள்ளன.

சக்திமிக்க அரச சேவையொன்றை கட்டியெழுப்புவதற்கு தொழிற்சங்கங்களின் பங்களிப்பு மிக அவசியமானது. அதன் பலனை இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களும் பெறக்கூடியதாக இருக்கும் என்றார்.

தொழிற்சங்க பிரதிநிதிகள் தொழில் அமைச்சர் காமினி லொக்குகே, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி வீ. பி.ஜயசுந்தர ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-2)

# பட்டினி ஒழிப்பில் இலங்கை 39ஆவது இடத்தை வகிக்கிறது

(கொழும்பு)

உலகில் பட்டினியை ஒழித்த நாடுகள் பட்டிய்லில் இலங்கை 39 ஆம் இடத்தை வகிக்கின்றது. 2010 ஆம் ஆண்டுக்கான உலக பட்டினி குறியீட்டெண் பட்டியல் கடந்த 11 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இதில் ஆபிரிக்க நாடுகளில் பட்டினி அதிகரித்துள்ளதாகவும் 100 கோடி பேர் பட்டினியால் தவிக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் பட்டினி ஒழிப்பில் உலக அளவில் தெற்காசியாவும் தென்னமெரிக்காவும் பெரும் முனைப்புக் காட்டுவதாக இந்த அறிக்கை கூறுகிறது.

குறிப்பாக மலேசியா இதில் மெச்சத்தக்க அளவில் பல முயற்சிகளை எடுத்து பட்டினியைக் குறைத்துள்ளதாகவும் இன்று கிட்டத்தட்ட பட்டினியற்ற தேசமாகவே மலேசியா மாறியிருப்பதாகவும் இந்த மதிப்பீடு தெரிவிக்கிறது. இந்த பட்டியலின் படி பட்டினியை முற்றாக ஒழித்த நாடு என்ற பெருமையைப் பெறுகிறது குவைத் இதற்கு அடுத்த இடம் ம்லேசியா வுக்குக் கிடைத்துள்ளது.

84 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் சீனாவுக்கு 9 ஆவது இடம் கிடைத்துள்ளது. பட்டினி ஒழிப்பில் இலங்கை 39 ஆவது இடத்தையும் நேபாளம் ,பாகிஸ்தான் 57 ஆவது இடத்தையும் இந்தியாவோ 67 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

உலக வல்லரசுகளில் ஒன்றாகப் பார்க்கப்படும் இந்தியாவில் பட்டினி ஒழிப்புக்கான திட்டங்களை ஏட்டளவில் வகுப்பதோடு நிறுத்திக் கொள் வது தான்இந்த நிலைக்குக் காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

இங்கே பயன்படுத்தப்படும் உணவு தானியங்கள் பயன்படுத்துவதைவிட வீணாக்குவதே அதிகம் என்று குறிப்பிட்டுள்ளது. இதன் விளைவு உலகின் எடை குறைந்த மெலிந்த குழந்தைகளின் எண்ணிக்கையில் 42 சதவீதம் இந்தியாவில் இருப்பதாக மதிப்பீடு தெரிவிப்பதோடு கடந்த ஆண்டு இந்தப் பட்டியலில் இந்தியா 65ஆவது இடத்தில் இருந்து இந்த ஆண்டு 67 ஆவது இடத்திற்கு நழுவியிருக்கிறது. (ஸ்ரீ-2)


# 5 இலட்சத்திற்கு மேற்பட்ட பெண்களுக்கு ஒஸ்டியோபொரோசிஸ் நோய் பாதிப்பு


இலங்கைப் பெண்களின் 5 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் தற்போது ஒஸ்டியோபொரோசிஸ் நோய் பாதிப்பிற்கு உள்ளாகி யிருப்பதாக பொது நிபுணத்துவ மருத்துவர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மொத்த பெண்கள் சனத்தொகையில் 4 இல் ஒரு பங்கினர் இந்த பாதிப்பிற்கு உள்ளாகியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று ஆண்கள் சனத்தொகையில் 30 சதவீதமானோரும் ஒஸ்டியோபொரோசிஸ் நோய் தாக்கத்திற்கு உள்ளாகியிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஒஸ்டியோபொரோசிஸ் நிலைமையை கட்டுப்படுத்துவது தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற போதே அவர் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய குருதிச் சோகை நோய் தொடர்பான நிபுணர் லலித் விஜேசிங்க 60 தொடக்கம் 70 வரையான வயதுடைய பெண்களில் மூன்றில் ஒருவர் ஓஸ்டியோ பொரோசிஸ் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாவதாக தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)





முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் வலயக்கல்விப்பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அழைத்துவரப்படுவதையும் சாதனை படைத்த மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Sale! Sale! Sale!
மாபெரும் மலிவு விற்பனை
தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க
11.10.2010 முதல் 05.11.2010 வரை
சகல விதமான துணிவகைகள் மற்றும் றெடிமேற் ஆடைகள் என்பனவற்றை விசேட கழிவு விலையில் மலிவாகப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
லைடன் புடைவை நிலையம்
இல.40, ஆஸ்பத்திரி வீதி,(பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.
(சி-1382) தொலை பேசி :- 021 222 2381

# சிக்க வைக்கும் தூண்டில்கள்



இணையத்தில் நம்மைச் சிக்கவைத் திடும் தூண்டில்களில் மிக மோசமாக ஏமாற்றும் தூண்டில்கள் குறித்து இங்கே தருகிறோம்.

**♦ பிளாஷ் பயன்படுத்தும் இணையத் தளங்கள்**

அண்மைக் காலங்களில், அடோப் நிறுவனத்தின் கிராபிக்ஸ் சொப்ட்வெயர் தொகுப்பான பிளாஷ் பயன்படுத்தும் இணையத்தளங்கள், பெரிய அளவில், எளிதாக கெடுதல் புரோகிராம்களுக்கு வழி விடும் தளங்களாக மாறிவருகின்றன. இதில் தற்போது பிளாஷ் குக்கீஸ் எனப்படும் சிறிய புரோகிராம்களும் சேர்ந்துள்ளன. வழக்க மாக, இணையத்தளங்கள் நம் கணனியில் பதிக்கும் குக்கீஸ் போல, இவையும் இறங்கி விடுகின்றன. இவை நாம் செல்லும் தளங் கள் குறித்த தகவல்களை,இதனை அனுப் பியவருக்குப் பட்டியலிட்டு அனுப்புகின்றன. இதில் என்ன வேடிக்கை என்றால், மற்ற குக்கிகளை அழிக்கும்போது, இவை நீக்கப்படாமல் தங்கிவிடுகின்றன.

இத்தகைய சிக்கலிலிருந்து தப்பிக்க, நம்முடைய பிளாஷ் புரோகிராம்களை அப் டேட்டாக வைத்திருக்க வேண்டும். அப்டேட் செய்வதும், நாமாக அடோப் தளம் சென்று மேற்கொள்வதாக இருக்கவேண்டும்.

**♦ சுருக்கப்பட்ட தொடர்புகள் (Shortened Links)**

ஸ்கேம் மெயில் அனுப்புவர்கள், ட்விட்டர் சமுதாய தளத்தினை அதிகம் பயன்படுத்துகின்றனர். ஏனென்றால் ட்விட்டர் தளம் சுருக்கப்பட்ட தளப் பெயர்களை அதிகம் பயன்படுத்து கிறது. இந்த சுருக்கப்பட்ட தளப் பெயர் களில், மால்வெயர் புரோகிராம் கள் மற்றும் ஸ்கேம் பைல் களை மறைத்து வைப்பது எளிதாகிறது. எனவே லிங்க் மீது கிளிக் செய்து தளம் செல் வதைத் தவிர்க்கவும். இதற்குப் பதிலாக ட்விட்டர் கிளையண்ட் அப்ளிகேஷன் களைப் பயன் படுத்தவும். இதற்கு ட்வீட் டெக் (Tweet Deck) அதிகம் பயன்படும்.

**♦ மின்னஞ்சல் ஸ்கேம் அல்லது இணைப்பு கோப்புகள்**

இணைக்கப்பட்ட கோப்புகள் என்ற பெய ரில் நம் கணனியைக் கெடுக்கும் வைரஸ்கள் மற்றும் பிஷ்ஷிங் மெயில்கள் இன்று அன் றாட வழக்கமாகவிட்டாலும், இவற்றை உண்மையான மெயில்களிடமிருந்து பிரித் துப் பார்ப்பது கடினமாதாகும்.

இதிலிருந்து தப்பிக்க,மெயில் இணைப்பு கொண்டிருந்தால், அதனைச் சந்தேகிக்க வும். அது ஒரு இணையத்தளக் கோப்பாக இருப்பின், அந்தத் தளம் சென்று பார்க்கவும் அல்லது இணையத்திலேயே இந்த இணைப்பு கோப்புகளைச் சோதனை செய்து, அதில் வைரஸ் உள்ளதா என்று தெரிவிக்கும் இணை யத்தள சேவைகளைப் பயன்படுத்தவும்.

**♦ வீடியோ, மியூசிக் பைல்கள்**

திருடப்பட்ட மியூசிக், வீடியோ மற்றும் சொப்ட்வெயர் அப்ளிகேஷன் பைல்களைத் தரும் தளங்கள் (Torrent sites) மிக அதிக மான எண்ணிக்கையில் கெடுதல் விளை விக்கும் புரோகிராம்களைக் கொண்டிருப்ப தாக ஹார்ட்வெயர் பல்கலையில் மேற்கொள் ளப்பட்ட ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

இந்தத் தளம் செல்பவர்கள், பெரும்பாலும் கட்டணம் செலுத்தாமல், இதில் கிடைக்கும் கோப் புகளைப் பெறுவதால், இந்தத் தளங்கள் வாடிக்கையாளர்களின் நலனைக் காப்பதே இல்லை.எனவே, இந்தத் தளங்களில் இருந்து கோப்புகளை இறக்குவதற்கு முன் நன்கு சிந்திப்பது நல்லது.

கட்டாயம் அவை தேவை எனில், மேலதி கமாக முக்கிய கோப்புகள் இல்லாமல், நிதி சார்ந்த பணி மேற்கொள்ளாத கணனிகளில் இந்தத் தளங்களுக்குச் செல்வது நல்லது.

**♦ பாலியல் தளங்கள்**

வாடிக்கையாளர்களைப் பிடித்து அவர் களுடன் வர்த்தகம் மேற்கொள்வதற்காக, பாலியல் படங்கள் மற்றும் வீடியோக்களை சில தளங்கள் இயக்குகின்றன. ஆனால் இவற்றைத் தொடர்ந்து பார்த்து வருபவர்கள், என்றாவது ஒரு நாளில் வைரஸ் தாக்கு தலுக்கு ஆளாகிறார்கள் என்று கண்டறியப் பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டது போல, இதற்கும் மேலதிகமாக உள்ள கணனியைப் பயன் படுத்தவும்.

**♦ வீடியோ சப்போட் பைல்கள்**

சில வீடியோ வகைகளை தரவிறக்கம் செய்கையில், அவற்றை இயக்க, சில குறிப் பிட்ட கோடக் பைலினை, இறக்கிப் பதியுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறோம். இந்த வகையி லும், நம் கணனிகளில் வைரஸ் புரோகிராம் கள் இறங்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. பாதுகாப்பு குறித்த பணிகளை மேற்கொள் ளும் ட்ரெண்ட் (Trend Micro) நிறுவனத் தளத்தில் இதுகுறித்த பயனுள்ள தகவல்கள் உள்ளன.

**♦ போன்களுக்கான சொப்ட்வெயர் தொகுப்புகள்**

மொபைல் போன்களுக்கான, குறிப்பாக ஸ்மாட் போன்களுக்கான, அப்ளிகேஷன் சொப்ட்வெயர் தொகுப்புக்கள், இப்போது மொபைல் போன் நிறுவனத் தளங்களிலும்; பிற தளங்களிலும் கிடைக்கின்றன. இந்த போர்வையில் கெடுதல் புரோகிராம்களும் நுழைகின்றன.

அண்மையில் பிரபலமாகி வரும் அண்ட்ராய்ட் சார்ந்த புரோகிராம்கள் பல இவ்வாறு இருப்பதாகத் தெரிய வந்துள் ளது.இவற்றிலிருந்து தப்பிக்க தளங்க ளின் தன்மையை தெரிந்து செல்வது நல்லது.

**♦ தேடல் சாதனம் வழியே**


குறிப்பிட்ட தகவல் சார்ந்த தளங்க ளைத் தேடுகையில், முதன்மைத் தள மாகப் பட்டியலிடப்படும் தளங்களில் பல, கெடுதல் தரும் புரோகிராம்கள் இருக்கும் தளங்களாக உள்ளன. வைரஸ் எதிர்ப்பு புரோகிராம்களைத் தயாரித்து வழங்கும் மெக் அபி நிறுவனம், இந்த வகையில் 19% தேடல் முடிவுகள் இருப்பதாக அறிவித் துள்ளது.

எனவே தேடல் சாதனங்கள் தரும் முடிவின் அடிப்படையில், தளங்க ளுக்குச் செல்வதாக இருந்தால், அனைத்து தளங் களையும் ஆய்வு செய்து கெடுதலாக இருக்காது என்று உறுதி செய்த பின்னரே செல்லவும்.

(தொடரும்)

# நானா மெயில் அனுப்பினேன்?

திடீரென உங்கள் நண்பர்கள் போன் செய்து, உங்கள் கணனியிலிருந்து, தேவை யற்ற மெயில்கள் வந்துள்ளதாகவும், அது போல அனுப்பவேண்டாம் என்றும் சொல் வார்கள். விபரம் தெரிந்த நபர்கள், உங்கள் இமெயில் எக்கவுண்ட்டிலிருந்து, நீங்கள் அனுப்பாமலேயே சில மெயில்கள் வருவ தாகக் குற்றம் சாட்டுவார்கள். கனிவுள்ளவர் களோ, இதுபோல வருகின்றன. உன் கணனி யை வைரஸ் மற்றும் ஸ்பேம் மெயில், மால்வெயர் புரோகிராம் செக் செய்திடச் சொல்வார்கள்.



இதுபோன்ற சூழ்நிலையில் என்ன நடக்கிறது? என்று நீங்கள் விழிப்பீர்கள். ஏனென் றால், நண்பர் கள் குறிப்பிடும் அந்தமெயில் எல் லாம், உறுதியாக நீங்கள் அனுப்பவில்லை என்று தெரியும். ஏன் அது உங்கள் கணனியில் கூட அனுப் பப்பட்டிருக்காது.

உங்கள் நண்பர்கள் வட்டத்தில் ஒருவரின் கணனி ஸ்பேம் மெயில் அல்லது வைரஸ் அல்லது மால்வெயர் புரோகிராமினால் பாதிக்கப்படடு, அது உங்கள் இமெயில் எக்க வுண்ட் மூலமாக இந்த ஸ்பேம் மெயில்களை, அட்ரஸ் புக்கில் உள்ள அனைவருக்கும் அனுப்பியிருக்கலாம் அல்லது நீங்கள அறி யாத ஒரு நபர், உங்கள் இமெயில் எக்க வுண்டினையே ஹைஜாக் செய்திருக்கலாம்.

**இதற்கான தீர்வு என்ன?**

முதலில் உங்கள் இமெயில் எக்கவுண் ட்டினை நீங்கள் அணுகித் திறந்து பார்க்க முடிகிறது என்றால், அதன் பாஸ்வேர்டை உடனே இன்னும் கடுமையான பாஸ்வேர் டாக மாற்றவும்.உங்களால் உங்கள் இமெ யில் எக்கவுண்டினை,வழக்கமான பாஸ்வேர்ட் பயன்படுத்தித் திறக்கமுடியவில்லை என்றால், உங்கள் இமெயில் எக்கவுண்ட் ஹைஜாக் செய்யப்பட்டுள்ளது என்று பொருள்.

யாரோ ஒருவர், உங்கள் எக்கவுண்ட்டின் பாஸ்வோட்டைக் கண்டுபிடித்து, பாஸ்வேர் டினை மாற்றி,இதுபோல ஸ்பேம் மெயில் களுக்கெனப் பயன்படுத்திக் கொண்டுள் ளார்.ஒரு சிலர், இதுபோல இமெயில் ஹைஜாக் செய்த பின்னர், அதன் இமெ யிலுக்கு உரியவர் பெயரில்,அவரின் உற்ற நண்பருக்கு தான் கொழும்பு வந்து மாட்டிக் கொண்டதாகவும் , பணம் தேவை எனக் கூறி ஏதேனும் ஒரு எக்கவுண்ட் எண்ணுக்கு பணம் அனுப்ப வேண்டிக் கொள்வார். இதில் அனைத்துமே ஏமாற்று வேலை யாக இருக்கும் .

இதுபோல இமெயில்கள் ஹைஜாக் செய்யப்படுகையில், உடனே உங்களுக்கு இமெயில் சேவையினை வழங்குப வரைத் தொடர்பு கொண்டு, உடனடியாக உங்கள் எக்கவுண்டினை மீட்டுத்தருமாறு கேட்டுக்கொள்ளவும்.

இலவசமாக இமெயில் தரும் பிரபல நிறுவனங்கள் எனில், அவர்கள் தளத்தில் இதற்கான வழி தரப்பட்டிருக்கும். சில பிரபல இமெயில் எக்கவுண்ட்டில் இது போல ஏற்பட்டால் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய தள முகவரிகள் கீழே தரப்பட் டுள்ளன.

ஜிமெயில் -http://mail. google. com/support/bin/answer. py?hl= en&answer=50270

யாஹு-http://help.yahoo.com/l/ us/yahoo/abuse/issues/issues-7 13223.html

ஹொட்மெயில்:-http://windows livehelp.com/solution.aspx?soluti onid=1fe6ed3e-eef6-4c57-933f-f3c 408f1c5c1

ஆனால் பாஸ்வேர்ட் கொடுத்து எக்க வுண்டில் நுழைய முடியும் என்றால், அந்த எக்கவுண்ட் ஹைஜாக் செய்யப்படவில்லை. ஆனால் உங்களுடைய பாஸ்வேர்டினைப் பயன்படுத்தி யாரோ விளையாடுகிறார்கள் என்று பொருள். உடனே மேலே குறிப்பிட்ட படி, பாஸ்வேர்டினை மாற்றவும்.




# ஏவிஜி அண்ட்டி வைரஸ் இலவசபதிப்பு 2011



அண்ட்டி வைரஸ் தொகுப்பு என்ற அளவில் மிகவும் பிரபலமான ஒரு நிறுவனம் ஏவிஜி நிறுவ னம் ஆகும். கட்டணம் செலுத்திப் பெறும் தொகுப் புடன் இலவசமாகப் பயன் படுத்தவும் அண்ட்டி வைரஸ் தொகுப்பினை இந்த நிறு வனம் தந்து வருகிறது. அந்த வரிசையில் அண் மையில் இதன் மேம்படுத்தப்பட்ட இலவச தொகுப்பு வெளியாகியுள்ளது. AVG Antirus Free Edition 2011 என அழைக் கப்படும் இந்தத் தொகுப்பில் வைரஸ் எதிர்ப்பு தொகுப்பு, ஸ்பைவேர் தொகுப்பு, இமெயில் ஸ்கேனர், ரெசிடெண்ட் ஷீல்ட் என்னும் பாதுகாப்பு வளையம் இணைய தள தொடர்புகளை அலசிப் பார்த்து எச்ச ரிக்கும் லிங்க் ஸ்கேனர்.

அண்ட்டி ரூட் கிட் மற்றும் பேர்சனல் கணனி ஸ்கேனர் ஆகியவை அடங்கியுள் ளன.

இதற்கு முன் வெளியான ஏ.வி.ஜி. அண்ட்டிவைரஸ்தொகுப்புகளுடன் இணைந்து இயங்கும் வகையில் இது வடிவமைக்கப் பட்டுள்ளது.

இதனை இலவசமாகத் தரவிறக்கம் செய்திட **http://free.avg.com/inen/ downloadfiledmafh** என்ற இணைய முகவரிக்குச் செல்லவும்.



# தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி
# நூற்றாண்டு விழா சிறப்புமலர்-1910-2010



## ஆனந்த நடராஜப் பெருமாள் ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி




வட மாநிலத்தில் நிலவளம், நீர்வளம், கலைவளம், தெய்வீக சிந்தனை, மனித வளம், தொழில் வளம் முதலான அனைத்து வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள பெருமைக்குரியது இப் பிரதேசம். எனினும் போர் அனர்த்தங்களால் இங்குள்ள வளங்கள் எல்லாம் பேரழிவுக்குள்ளாகியது யாவரும் அறிந்ததே. இதனால் எதிர்காலத்தில் மகாஜனக் கல்லூரி இயங்குமோ என்ற ஏக்கம் எல்லோர் மத்தியிலும் பதிந்து நிழலாடியது. இறைவன் அருளால் மீண்டும் மகாஜன அன்னை சிறப்புற்று பொலிவுடன் விளங்கிக் கொண்டிருக்கின்றாள்.

கல்லூரியின் நூற்றாண்டு விழாச்சிறப்புற எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானின் அருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

இ.மகாலிங்கக்குருக்கள்.

## கல்வி உலகிற்கே உதாரணமாகத் திகழும் கல்லூரி



1910ஆம் ஆண்டு பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மகாஜன என்ற விருட்சம் இன்று நூற்றாண்டு விழாவைக் காணும் நிகழ்வு பெரும் நிறைவை தருகின்றது. இன்னல்களுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் மத்தியிலும் நிலைதளராது சாதனைகளை நிலை நாட்டி வெற்றி கண்டு முன்னேறிச் செல்லும் கல்லூரியின் ஆளுமையைக் கண்டு பெருமைப்படுகின்றேன்.

தனது சொந்த இடத்தில் கல்லூரி தனது நூற்றாண்டைக் காண்பது பெருமை சேர்க்கும் விடயம். கல்வி உலகிற்கே உதாரணமாகத் திகழும் கல்லூரியும் அதன் பாடசாலைச் சமூகமும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற இறை அருளை வேண்டு கின்றேன்.

கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி
அமைச்சர்.

## நீண்ட பாரம்பரியம் கொண்ட மகாஜனக்கல்லூரி




இலங்கையில் பல கல்விமான்களையும் முகாமையாளர்களையும் எந்திரிகளையும் வைத்தியர்களையும் மற்றும் பல் துறை சார்ந்த விற்பன்னர்களையும் மகாஜனக்கல்லூரி ஆக்கிக் கொண்டிருக்கிறது எனக்கூறுவது மிகையாகாது.

இக்கல்லூரி கல்விச்சாதனைகளைப் படைத்து வருவதோடு புறக்கலைத்திட்ட செயற்பாடுகளிலும் முன்னணியில் நிற்பதனைக் கண்டு பெருமையடைகின்றேன். நூற்றாண்டு விழா சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்கள்.

இ.இளங்கோவன்,
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வட மாகாணம்.

## துணைவேந்தரின் வாழ்த்து



மகாஜன எங்கள் தாய், எங்களது அறிவின் ஆதாரம். நாங்கள் வரித்துக் கொண்ட இலட்சியங்கள், எங்களை வழிப்படுத்துகின்ற விழுமியங்கள், எங்கள் வாழ்வுக்கான திறன்கள் அனைத்தும் மகாஜன அன்னையின் அருட்கொடை கள்.

சுயபண்பாட்டு விழிப்புணர்வின் ஊற்றுக் கண்ணாக பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் அயரா உழைப்பில் மலர்ந்த மகாஜனவின் நூற்றாண்டு விழா பெருமிதம் இன்று எங்களுக்கானது.

அழகான மகாஜனவின் அர்த்தங்களைக்காக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர்.நா.சண்முகலிங்கன்,
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## மகாஜனக் கல்லூரியின் வரலாறு

கல்விக்குப் பெயர்போன யாழ்.மண்ணில் வலிகாமம் வடக்குத் தெல்லிப்பழைப் பிரதேசத்தின் அம்பனை எனும் கிராமத்தில் மகாஜனக் கல்லூரி அமைந்துள்ளது. இக்கல்லூரி 1910, ஒக்டோபர் 14 ஆம் நாள் சமூக சீர்திருத்தவாதியும் இலக்கியப் படைப்பாளியுமான பாவலர் தெ.அ.துரையப்பா பிள்ளை அவர்களால் மகாஜன ஆங்கில உயர்தர பாடசாலை என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. பாவலரே பாடசாலையின் ஸ்தாபக தலைமை ஆசிரியரானார். 1929 இல் பாவலரின் மறைவைத் தொடர்ந்து உயர்திரு கா. சின்னப்பா அவர்கள் தலைமை ஆசிரியரானார். 1943 இல் பெண்களும் பாடசாலையில் இணைக்கப்பட்டனர். பாடசாலை கலவன் பாடசாலையாகியது.

1945 இல் பாவலரின் மகன் 'மகாஜன சிற்பி' உயர்திரு தெ.து.ஜெயரத்தினம் அவர்கள் அதிபரானார். பாடசாலையின் பெயர் மகாஜனக் கல்லூரி ஆகியது. இவரது காலம் (1945-1970) 'மகாஜனவின் பொற்காலம்' எனப் போற்றப்படுகிறது. 1946 இல் கல்லூரி இலச்சினை 'உனை நீ அறி' எனும் மகுட வாசகத்துடன் வடிவமைக்கப்பட்டது. 1949 இல் கல்லூரி நாட்டின் முதற் தரப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. கல்லூரிக் கீதம், கொடிக்கீதம் என்பன புலவர் நா.சிவபாதசுந்தரனார் அவர்களால் 1951 இல் இயற்றப்பட்டன. 1 AB பாடசாலையாக உயர்ந்த இக்கல்லூரி ஒரு தேசிய கல்வியகமாக நிலைபெற்றுக் கொண்டது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் மகாஜனவைத்தேடி வரலாயினர். இன, மத, குலபேதங்களின்றிக் கல்வித்தாகம் உடைய மாணவர்களை மகாஜன உள்வாங்கியது. கல்லூரி மகாஜனங்களின் கல்விக்கூடமாகியது. கல்லூரியின் அதிபராக உயர்திரு.க.நாகராஜா அவர்கள் சேவையாற்றிய காலப் பகுதியில் (1985-1998) நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் கல்லூரி பல இன்னல்களுக்கு முகங்கொடுத்தது; பல இடம்பெயர்வுகளைச் சந்தித்தது; பிறபாடசாலைகளில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கியது. 1994 இல் மருதனார்மடத்தில் புதிதாகக் கொட்டகைகள் நிர்மாணிக்கப்பட்ட கல்லூரி தனித்துவத்துடன் திகழ்ந்தது; பல சாதனைகளைப் படைத்தது. 1999 இல் மீண்டும் அம்பனைக்குச் சென்று புதுப்பொலிவுடன் இயங்கி வருகிறது. கல்லூரியின் பழைய மாணவியான திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள் கடந்த 2006, ஒக்டோபர் தொடக்கம் கல்லூரியின் முதலாவது பெண் அதிபராகத் தலைமையேற்றுக் கல்லூரியை வழி நடத்தி வருகின்றார்.

வடபுலத்துக் கிராமத்துக் கல்லூரியான மகாஜன கல்வி, விளையாட்டு, இயல், இசை, நாடகம் என அனைத்திலும் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பல சாதனைகளைப் புரிந்து வருகின்றது. விஞ்ஞானிகள், புலமையாளர், விளையாட்டு வீரர், எழுத்தாளர், கலைஞர், சமூக சிந்தனையாளர் எனப் பெயர் விளங்கும் ஆளுமைகளை உருவாக்கிச் சர்வதேச அரங்கிலும் தடம் பதித்து வருகின்றது.

'வெல்லுக மகாஜன மாதா.'



யாழ்ப்பாணம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் முத்திரைப்பணியகத்தினால் ரூபா 10.00 பெறுமதியுடைய புதிய தபால் முத்திரையொன்று 2010, ஜுன் 18ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது.

### 2010 இல் கல்லூரியின் சாதனைகள்

☆ அகில இலங்கை பாடசாலைகளிற்கு இடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் கோலூன்றிப் பாய்தலில் செல்வன் மோகுநாத் முதலாம் இடம் பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொண்டார்.

☆ செல்வி பா.புகழரசி இலங்கை தேசிய கனிஷ்ட கரப்பந்தாட்ட அணியில் அங்கம் வகித்து வியட்னாமில் நடந்த போட்டியில் கலந்து கொண்டு பெருமை சேர்த்துள்ளார்.

☆ தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 22 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

☆ அதிஉயர் குடியுரிமை விருதினை செல்வி.வை. வைஸ்ணவி தலைமையிலான குழுவினர் பெற்றுக் கொண்டனர்.

☆ க.பொ.த.சாதாரண பெறுபெறு

9A-1, 8A-1, 7A-3, 6A-1,5A-6,4A-5

**பல்கலைக்கழக அனுமதி**

பொறியியல் -03, அளவை விஞ்ஞானத் துறை -01, பௌதீக விஞ்ஞானத்துறை - 01, விவசாய விஞ்ஞானத்துறை - 01, முகாமைத்துவத்துறை - 02, கலைத்துறை - 18

☆ தமிழறிவுப் போட்டி தேசிய மட்டம் முதலாமிடம் பெற்றவர்கள் சி.ரோபிதா, இ.ஸ்ரீவாணி, ஐ.தனுஜா, இ.கௌதமி, அ.நிலானி

☆ தேசிய ரீதியான சாரணிய ஜனாதிபதி விருது
கு.யுவர்ணன், பா.கேகஜன்

☆ தேசியமட்ட வினாடிவினாப்போட்டியில் ச.வேணிலன்
1ஆம் இடம்

☆ அகில இலங்கை சைவசமய தேர்வில் தங்கப் பதக்கம்
நி.பாபுதரன், ம.மயூரஸ்

## கல்லூரி அதிபரின் வாழ்த்து





ஒரு கல்வி நிறுவனம் நூறு ஆண்டு காலம் கல்வியுலகில் தன் சேவையைப் பதிந்து மிடுக்கொடு தலை நிமிர்ந்து நிற்கின்றதென்றால் இந்நிறுவனத்தின் நூற்றாண்டு செயற்றிறன் மிக உயரியதாக, சிறப்பானதாக, அர்ப்பணிப்புள்ளதாக இருந்திருக்க வேண்டும்.

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் அம்பனை கிராமத்திலுள்ள மகாஜனங்களுக்கு கல்வி அறிவை புகட்ட திண்ணைப் பள்ளிக்கூடமாக ஆரம்பித்த இக் கல்விச்சாலை ஒரு விருட்சமாக உலகெங்கும் தன் மைந்தர்களை வெவ்வேறு துறைகளிலும் குறிப்பாக மருத்துவம், பொறியியல், விஞ்ஞானத்துறை, ஆன்மீகம், சட்டத்துறை, கலை, விளையாட்டு, அரசியல் ஆகிய துறைகளில் மிக உயர்ந்த இடங்களில் வைத்திருக்கின்றாள். அன்னையவளை மகாஜன மைந்தர்கள் நன்றியோடு நினைத்து கொண்டிருக்கிறார்கள்.

பூரிப்போடு தன் மைந்தர்களை அரவணைக்கும் மகாஜன மாதா இன்னும் பல நூற்றாண்டுகள் சாதனைகள் படைக்க வேண்டும். சாதனையாளர்கள் பல நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாட வேண்டுமென்று சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை வணங்கி இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

"வெல்லுக மகாஜன மாதா,"
திருமதி சிவமலர் அனந்தசயனன்,
அதிபர்,
யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

## பல நூறு ஆண்டுகள் வளமுடன் வாழ்க




மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் சைவமும் தமிழும் கல்விச் செல்வமும் தழைத்தோங்கிட வேண்டுமெனும் பேரவாக் கொண்டே மகாஜனக் கல்லூரியைத் தொடங்கினார். அவர் மகனார் ஜயரத்தினம் முதல் மகாஜனவின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மகாஜனவின் பாரம்பரியத்தை காத்து வந்திருக்கிறார்கள். பல ஆயிரம் மாணவர்கள் பல துறைகளில் முன்னேறிப் புகழ் சேர்த்திருக்கிறார்கள்.

மகாஜன நூற்றாண்டு விழா வெற்றி பெறவும் மேலும் பல நூற்றாண்டுகள் வாழ்வும் வளமும் பெற்றுச் சிறந்து விளங்கவும் வாழ்த்தி நிற்கின்றேம்.

மாவை.சோ.சேனாதிராசா,
பாராளுமன்ற உறுப்பினர்.

## வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



புகழ்பூத்த யா/மகாஜனக் கல்லூரி இவ்வாண்டு தனது நூற்றாண்டு விழாவினைப் பல சிறப்பு நிகழ்வுகளுடன் வெகு விமரிசையாக கொண்டாடி வருகின்றது.

கிராமச்சூழலில் சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வறிவாலயம் இப் பகுதி மக்களின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்து இன்று பெரு வளர்ச்சி பெற்ற நிலையில் தனது நூற்றாண்டு விழாவினை மிடுக்குடன் கொண்டாடுகின்றது.

கடந்த நூறுவருட காலப்பகுதியில் பல தலைசிறந்த கல்விமான்களை இக்கல்லூரி உருவாக்கியமை இக் கல்லூரியின் ஸ்தாபகரின் தூரநோக்கான சிந்தனைத் திறனாகும்.

இன்று கல்லூரியின் வளர்ச்சியிலும் நூற்றாண்டு விழா நிகழ்வுகளிலும் உற்சாகமாகப் பங்காற்றும் அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்களைப் பாராட்டுவதுடன் இன்னும் பல நூற்றாண்டுகள் மகாஜன வீறு நடைபோட வாழ்த்துகின்றேன்.

ப.விக்கினேஸ்வரன்,
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
வடமாகாணம்.

# நாடு கடந்த தமிழீழ அரசு சுதந்திர தமிழீழ அரசின் ஆயுதம்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதல் பிரதமராக உருத்திரகுமாரன் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். அடியோடு வீழ்த்தப்பட்ட ஈழத் தமிழ் இனத்தின் இப்போதைய நம்பிக்கை நாடு கடந்த தமிழீழ அரசுதான்! அதேசமயம் "இந்த முயற்சியெல்லாம் சாத்தியமா? என்ற கேள்விகளும்" இருக்கவே செய்கின்றன.

அமெரிக்காவில் இருக்கும் உருத்திரகுமாரனிடம் பேசினோம்.

ஒன்றும் இல்லை. எமது அரசாங்கம் அனைத்து நாடுகளின் சட்டங்களுக்கும்,குறிப்பாக அனைத்துலக மனித உரிமை சட்டங்களுக்கும் பொருத்துவதாகவே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டங்களை ஓர் ஆயுதமாக ஏந்திய வண்ணம்,தமிழீழ மக்களுக்காக சுதந்திர தமிழீழ அரசினை அமைப்பதற்காக எமது அரசாங்கம் அயராது

இதை உருவாக்கும் முயற்சிக்கே தலைமை தாங்க, நான் உட்பட்டேன். மலேசியாவில் கே.பி.கைது செய்யப்பட்டு சிறிலங்கா அரசிடம் கையளிக்கப்பட்ட பின்னர், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தொடர்பாக அவருக்கு எந்த சம்பந்தமும் இல்லை.

எமது அரசாங்கம்

தொடர்பகப்பொறுப்பாளர் காஸ்ட்ரோ ஆகியோருடன் இதே காலப்பகுதியில் தொடர்புகள் இருந்தன. மக்கள் மீது சிங்கள அரசால் மேற்கொள்ளப்பட்டு வந்த இனப்படுகொலையை எவ்வாறு தடுத்து நிறுத்தலாம் என்பதை இந்தத் தொடர்புகளுக்கு காரணமாக இருந்தன.

சிங்கள அரசின் பிடியில்

## பிரதமர் உருத்திரகுமாரன் பிரத்தியேகப் பேட்டி!

புதிய "அரசின்" பிரதமரான பின்னர் முதன் முறையாக அவர் நமக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டி இது...

"நாடு கடந்த தமிழீழ



கே.பி

**அரசை சட்ட விரோத அரசாக இலங்கை அறிவித்து இருக்கிறதே?"**

"சிறிலங்கா அரசின் பயத்தையே இது வெளிப் படுத்துகிறது. சிறிலங்கா அரசின் சட்டங்கள், தமிழர்களின் சம்மதமும் பங்களிப்பும் இன்றி நிறைவேற்றப்பட்டவை. தமிழர்கள் அவற்றை சட்டங்களாக என்றுமே ஏற்கவில்லை.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அவர்களின் சட்டங்களுக்கு முரணாக இருப்பதாக சொல்வதில் ஆச்சரியப்படுவதற்கு

உழைக்கும்!"

**"நாடு கடந்த தமிழீழ அரசு,இன்று இலங்கை அரசுக்கு ஆதரவாகிவிட்ட கே.பி.யின் சிந்தனையில் தான் முதலில் உருவெடுத்ததாக பரபரப்பு ஏற்பட்டு வருகிறதே?"**

"மே மாதம் 19ஆம் திகதிக்கு பின்னர் தோற்றம் பெற்ற புதிய சூழலில்,தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அடுத்த கட்டம் குறித்த நகர்வுகளை முன்னெடுப் பதற்கு தாயகத்திலும் புலத்திலும் உள்ள அரசியலாளர்கள், அறிஞர்கள் ஒன்று கூடி விவாதித்ததே இந்த "அரசாங்கம்" என்ற அரசியல் அமைப்பை உருவாக்குவது என்ற முடிபுக்கு வந்தோம். இதற்கு விடுதலைப்புலிகள் அமைப்பின் அனைத்துலக உறவுகள் பொறுப்பாளர் என்ற பொறுப்பு நிலையில் இருந்து,கே.பி.களம் அமைத்துத் தந்தார்.

அதேவேளை, இந்த அமைப்பு உருவாக்கப்படும் முறையிலும், செயற்படும் முறையிலும் சுயாதீனமாகவே இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் அவர் ஏற்றுக்கொண்டார். அந்த அடிப்படையில்,



உருத்திரகுமாரன்

வெளிப்படையாக... தனது அமர்வுகளில் மக்களும் அவதானிப்பாளர்களாக பங்குபெறக்கூடிய வகையில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. மக்களால் நேரடியாக வாக்களித்து தேர்வு செய்யப் பட்ட பிரதிநிதிகளின் முடிபுக்கு ஏற்பவே இது தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. மக்களால் நேரடியாக வாக்களித்து தேர்வு செய்யப் பட்ட பிரதிநிதிகளின் முடிபுக்கு ஏற்பவே இது தனது செயற் பாடுகளை முன்னெடுத்து வருகிறது!"

**"கே.பிக்கு மிக நெருக்கமானவராக உங்களைச் சொல்கிறார்கள் .சிங்கள அரசின் கைப்பாவையாக மாறி அவர் பரப்பும் கருத்துக்களை எப்படி பார்க்கிறீர்கள்?"**

"நான் போராட்டத்திற்குத்தான்

உள்ள கே.பி.யால் சுதந்திரமாக இயங்க முடியாது. சிறிலங்காவின் சிறைக்குள் இருக்கும் எவராலும் தமிழ்த்தேசியத்திற்கு பங்காற்ற முடியாது!"

**"நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமராக எப்போது தமிழகத்திற்கு வரப்போகிறீர்கள்?"**

"அதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான சக்தி தமிழக மக்களுக்கு உண்டு என்றே நான் கருதுகிறேன்!"

**"விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் -இந்நாள் தலைவர்கள், நாடு கடந்த தமிழீழ அரசை ஆதரித்து உங்களிடம் பேசினார்களா?"**

"தமிழீழ விடுதலைப் போராட் டத்தை... நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஊடாக அடுத்த கட்டம் நோக்கி முன்னெடுக்க விரும்பும் அனைவரும்

## ஜூனியர் விகடன்

நெருக்கமானவன் உண்மையில் கே.பி.அனைத்துலக உறவுகள் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர், மிகக்குறுகிய காலமே அவருடன் எனக்குத் தொடர்பு இருந்தது. அவருடன் மட்டுமல்ல... அரசியல் துறைப்பொறுப்பாளர் நடேசன், அனைத்துலக

எங்களின் முயற்சியை ஆதரிக் கிறார்கள். உங்கள் கேள்வியின் நோக்கத்தை இந்த வார்த்தைகள் பூர்த்தி செய்யும் என நினைக்கி றேன்!"

**"புலிகளின் தலைவர் பிரபாகரன் இருக்கிறாரா...?"**

"எதிர்காலம் இதற்குப் பதில் சொல்லும்!" *இரா.சரவணன்*

# 06 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

6ஆம் திகதியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் தங்களை வசீகரமாகக் காண்பித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களாக இருப்பார்கள். வாசனைத் திரவியங்கள், விலை உயர்ந்த பொருட்களைப் பயன்படுத்தும் எண்ணம் கொண்டவர்கள். மனதில் நினைத்ததை இரகசியமாக வைத்துச் செயல்படுபவர்கள். பலருக்கு பிறரைப் பழிவாங்கும் எண்ணம் இருக்கும். 6ஆம் திகதி பிறந்தவர்களின் தொழில் அதிபதி எண் 7 மற்றும் உதவி புரியும் எண்கள் 1, 5ஆக அமையப் பெற்றதால், இவர்களில் பெரும்பாலானோர் சிறப்பான வாழ்க்கை பெற்றவர்களாகவே இருப்பார்கள்.

6ஆம் திகதியில் பிறந்த அரசு ஊழியர்கள் பெரும்பாலும் பணம் வரவு-செலவு சம்பந்தப்பட்ட வங்கி, தணிக்கைத்துறை, பத்திரப் பதிவுத் துறை, சம்பளக் கணக்குத் துறை போன்றவற்றிலும் சேமிப்பு சம்பந்தப்பட்ட துறைகளிலும் இருப்பதைக் காணலாம். தொழில் எண் 7இன் ஆதிக்கமும் பிறந்த திகதி எண் 6-ன் ஆதிக்கமும் சரியாக அமைந்து விட்டால், செல்வச் செழிப்பான வாழ்வைப் பெற்று விடுவார்கள். இவர்களின் குணம் பணம் வந்தபின்தான் 'மற்றவர்களுக்குத் தெரிய வரும்.

யாருக்கு எப்படியோ-தனக்குதான் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற சுயநலப் போக்கு அதிகமாகக் காணப்படும். இவர்களின் தொழில் உதவி எண் 1 மற்றும் 5-ஆக இருப்பதால், இவர்களின் முன்னேற்றமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். மிக அதிகமாக கௌரவமும் பணமும் புகழும் அடைய விரும்பி, தன் குடும்ப விடயங்களில் தலைகுனிவு ஏற்பட்டு வருத்தப்படுபவர்கள் இவர்களே. எனவே எதிலும் கவனமாகவும் நிதானமாகவும் செயல்பட்டால் நன்மைகளை மட்டும் பெறும் நிலை உண்டாகும். உயர்பதவியில் இருக்கும் இவர்கள் எண் ஆதிக்கம் குறைவாக இருந்தால் மிகச் சாதாரணமாகவும் மிகச் சிறிய பதவியில் இருப்பவர்களின் நட்பால், தன் நிலையை விட்டுத் தாழ்ந்து, புகழ், கௌரவம் இழக்கும் நிலையும் உண்டாகும். பெண்களால் பிரச்சினைகளை அடிக்கடி சந்திக்கும் நிலை இருக்கும். அதிகார துஷ்பிரயோகம் மற்றும் பிறருக்குத் தடை ஏற்படுத்தும் குணமும் உண்டாகும். சீரான வளர்ச்சி பெற்று சிறப்பான வாழ்வு வாழ வெள்ளிக்கிழமை தோறும் கஜலட்சுமிக்கு நெய் தீபம் ஏற்றி இனிப்பு வகைகள் வைத்து 'வழிபாடு செய்து வந்தால் நன்மைகள் பல பெறலாம்.

பணம் பாதாளம் வரை பாயும் என்ற சொல்லை உண்மையாக்கும் திறமை படைத்த இவர்களுக்கு 6ஆம் எண்ணின் ஆதிக்கம், 1 மற்றும் 5ஆம் எண்களின் ஆதிக்கம் முறையே சக்கர வடிவில் நன்மைகள் செய்வதால், தீர்க்கமான சிந்தனையும் திடமான முடிவும் சரியான செயலும் செய்து மிகப் பெரிய வளர்ச்சியைக் காண்பார்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்து வெற்றியும் இலாபமும் ஒருசேரப் பெறும் வாய்ப்பு இவர்களுக்கு உண்டு. எண் ஆதிக்கம் இருக்கும் போது மிக வேகமாக வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளும் அறிவையும் பெற்றவர்களாக இருப்பார்கள். நட்பு எண்ணான 1 இவர்களின் சிந்தனையைத் தூண்டிக் கொண்டே இருப்பதால் எப்போதும் சிந்தித்தபடியே இருப்பார்கள். பெரும்பாலும் பைனான்ஸ், நகைக் கடை, அடகுக் கடை, ஹையர் பர்சேஸ், அலங்காரப் பொருட்கள், வாகனம் சம்பந்தபபட்ட துறைகளில் அதிகமாக ஈடுபடுவார்கள். எண் ஆதிக்கம் குறைவாக இருப்பதால் காமத்திற்கு அடிமையாகி பெரும் இழப்புகளைச் சந்தித்து, பெண்களால் அவமானப்பட்டு இழிநிலையில் கடைசி காலத்தைக் கழிப்பவர்களும் இந்தத் திகதியில் பிறந்தவர்களே. எனவே காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பதுபோல, நன்மைகள் நடக்கும்போது சரியான வழியில் சென்று நற்பலன்களை அடைவதற்கு, வெள்ளிக்கிழமை தோறும் நெய் தீபம் ஏற்றி, குபேர லட்சுமியை வழிபட்டு ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கி வந்தால் வீழ்ச்சி இல்லாத வெற்றிப் பாதையில் பவனி வரலாம்.

6ஆம் திகதியில் பிறந்த தொழிலாளர்களுக்கு ஏற்றமும் இறக்கமும் அடிக்கடி ஏற்படும். பிறந்த திகதி எண் ஆதிக்கமும் நட்பு எண்களில் 1ஆம் எண் ஆதிக்கமும் குறைவாக இருப்பதால்தான் இவர்களுக்கு இந்நிலை உண்டாகிறது. நினைப்பதைச் செயற்படுத்தும் வேலையில் ஏதேனும் ஒரு சிக்கலோ பிரச்சினையோ ஏற்பட்டுத் தடை ஏற்படும். அல்லது ஒரு குறிப்பிட்ட அளவே வருமானம் கிடைக்கக் கூடிய சூழ்நிலை உருவாகி விடும். தொழில் நட்பு எண் 5இன் தன்மை அடிக்கடி மாறி மாறி அமைவதால் முன்னேற்றத் தடை ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. நல்ல திறமை இருந்தும் சரியான நேரம் அமையாததால், எண் ஆதிக்கத்தின் வலிமை இழந்து சுமாரான பலனை மட்டும் அடையும்படி இருக்கிறது. இவ்வெண்ணில் பிறந்தவர்களின் முக்கிய வரப்பிரசாதம் என்னவென்றால், இன்று ஒரு வேலையை விட்டு வந்தால், நாளை உடனே மற்றொரு வேலைக்குச் சென்று விடுவது தான். அத்திபூத்தாற்போல ஒருசிலர் வாழ் வில் மட்டும் பெரிய முன்னேற்றம் காணும் நிலை ஏற்படுகிறது. சீரான வாழ்வும் சிறப்பும் பெற வெள்ளிக்கிழமை தோறும் மகாலட்சுமி மற்றும் விஷ்வக்சேனருக்கு நெய் தீபம் ஏற்றி, வெள்ளை மொச்சை நிவேதனம் செய்து வழிபட வேண்டும்.

6ஆம் திகதியில் பிறந்தோர் திடீரென கலைத் துறையில் நுழைந்து, மிகப் பெரிய வெற்றிகளையும் பொருளாதார நிலை உயர்வையும் பெறக் கூடியவர்களாக இருப்பார்கள். எண் ஆதிக்கம் சரியாக இருக்கும் வரை அனைத்தும் நலமாக அமையும். எண் ஆதிக்கம் குறையும்போது திடீர் சரிவும் மனம்போன போக்கில் போகும் நிலையும் உண்டாகும். கவனமாக செயற்பட்டால் அனைத் திலும் வெற்றி பெறுவது நிச்சயம். இவர்களுக்கு தொழில் எண் 7, உதவி செய்யும் எண்கள் 1, 5 இன் ஆதிக்கம் முழுவதும் கிடைக்கப் பெற்றால் மிகப் பெரிய சாதனைகள் புரிவார்கள். பெரும்பாலும் இவர்களுக்கு 7ஆம் எண்ணின் ஆதிக்கம் குறைவாகவே காணப்படுவதால் மனக் குழப்பத்தால் சரிவைக் காண்கிறார்கள். மேலும் பெண்களால் இத்துறையில் அடியெடுத்து வைக்கும் பலர் பெண்களாலேயே சரிவையும் காணும் நிலை இருப்பதால், எண் அதிக்கத்தைப் பெறும் வழிவகையைப் பின்பற்றினால் வெற்றி பெற்று விடுவார்கள். வெள்ளிக்கிழமை தோறும் நடராஜரை வணங்கி வந்தால் கலைத் துறையில் சாதனைகள் பல படைத்து ஏற்றமடையலாம்.

பிறந்த திகதி 6, விதி எண் 1ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் அதிக பட்சமாக 22 வருடங்கள யோக பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 6, விதி எண் 2ஆக உள்ளவர்களுக்கு 20 வயதுக்குமேல் 11 ஆண்டுகளும் 36 வயதுக்கு மேல் ஒன்பது ஆண்டுகளும் நற்பலன் உண்டாகும். பிறந்த திகதி 6, விதி எண் 3ஆக உள்ளவர்களுக்கு இடைவெளி விட்டு ஆறு ஆண்டுகள், பிறகு மூன்று ஆண்டுகள் இடைவெளி விட்டு ஆறு ஆண்

**எஸ்.என்.ஹரிஜி**

டுகள் என யோக பலன்கள் உண்டாகும், பிறந்த திகதி 6, விதி எண் 4ஆக உள்ளவர்களுக்கு மனதிற்குத் தேவை என்றால் கிடைக்கும் தேவையில்லை என்று நினைத்தால் சுமாரான அல்லது மிதமான பலன்கள் தொடர்ந்து கிடைக்கப் பெறுவார்கள். பிறந்த திகதி 6, விதி எண் 5ஆக உள்ளவர்களுக்கு 24 ஆண்டுகள் நற்பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 6, விதி எண் 6ஆக உள்ளவர்களுக்கு 33 ஆண்டுகள் நற்பலன்கள் செய்யும். பிறந்த திகதி 6, விதி எண் 7ஆக உள்ளவர்களுக்கு முதலில் 11 வருடங்களும், கடைசியில் 11 வருடங்களும் நற்பலன்கள் செய்யும். பிறந்த திகதி 6, விதி எண் 8ஆக உள்ளவர்களுக்கு 24 ஆண்டுகள் நற்பலன்கள் செய்யும். பிறந்த திகதி 6, விதி எண் 9ஆக உள்ளவர்களுக்கு குறைந்தபட்சம் 15,அதிகபட்சமாக 31 ஆண்டுகள் நற்பலனைச் செய்யும்.

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும்.

(தொடரும்)

## இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றாது நடத்தப்படும் சனத்தொகை கணக்கெடுப்பு நேர்மையானதாக அமையாது

# செல்வம் அடைக்கல நாதன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தினால் இடம் பெயர்ந்த மற்றும் அகதிகளாக புலம் பெயர்ந்துள்ள மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றாது எடுக்கப்படுகின்ற சனத்தொகை கணக்கெடுப்பு நேர்மையானதாக அமையாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு உள்ளிட்ட நாடு முழுவதும் அடுத்த வருடம் சனத்தொகை கணக்கெடுப்பு எடுக்கவிருப்பதாகவும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாவும் அரசாங்கம் அறிவித்திருப்பது குறித்து கேட்ட போதே கூட்டமைப்பின பிரதிச் செயலாளர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், யுத்தத்தினால் இடம்பெயர்ந்த வடக்கு கிழக்கைச் சேர்ந்த மக்கள் உள்நாட்டில் மட்டுமல்லாது வெளி நாடுகளிலும் இன்னும் அகதிகளாக இருக்கின்றனர்.


இந்தியாவில் மாத்திரம் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

தமது சொந்த இடங்களை விட்டுச் சென்றுள்ள மக்களை மீண்டும் அவ்விடங் களில் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்ப தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் இன்னும் பல ஆயிரக்கணக்கானோர் முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். மீள்குடியேற்றப்பட்டவர் களுக்கும் நிரந்தரமான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

நிரந்தரமான முகவரியோ வதிவிடமோ அங்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் அரசாங்கம் கூறுவதைப் போல் சனத்தொகைக் கணக் கெடுப்பு நடத்தப்படுவதென்பது சாத்தியமான தாக இருக்கமுடியாது.

அப்படியும் அது நடைபெறுமானால் நேர்மையான சனத்தொகை கணக்கெடுப்பாக அது நிச்சயமாக அமையாது என்பதையும்



தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே சனத் தொகை கணக்கெடுப்பானது நேர்மைத் தன்மையுடன் இடம்பெற வேண்டும் என்று கூட்டமைப்பு கேட்டுக் கொள்கிறது என்றார். (ஸ்ரீ-2)

## இலங்கையின் முதலாவது மாகாண நூலகம் திருமலையில் அமையவுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் முதலாவது மாகாண நூலகத்தை கிழக்கு மாகாணத்தின் திரு கோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பகுதியில் நிர்மாணிக்கவுள்ளதாக கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் எச்.எம். எம்.பாயிஸ் தெரிவித்துள்ளார்.

மிகப்பிரமாண்டமான முறை யில் நிர்மாணிக்கப்படவுள்ள இந் நூதனசாலை 2011 ஆண்டு மார்ச் மாதம் உத்தியோகபூர்வமாக திறக்கப் படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நூதனசாலையில் கிழக்கு மாகாணத்தில் வாழும் அனைத்து இன மதங்களை பிரதிபலிக்கும் வகையிலான பொருட்களை காட்சிப்படுத்தவுள்ளதாகவும் இந்நூதன சாலை மாகாண சபைகள் சட்டத்திற்கிணங்கவே அமைக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாண சபையின் மாதாந்த கூட்டத்தின் போது இந்நூதன சாலை அமைப்பதற்கான அனுமதியை சபை ஏகமானதாக வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2010 முதல் 16.11.2010 வரை




(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 ஆம் பாதங்கள் )

**திட்டமிடாது திடீர் திடீரென முடிவெடுக்கும் மிதுன ராசி நேயர்களே!**

பட்டி தொட்டிகளில் எல்லாம் உங்கள் புகழ் பரவ வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் நீங்கள். உரக்கப் பேசி உள்ளத்தில் இடம் பிடிப்பீர்கள். அதுவும் பேச வேண்டிய நேரத்தில், பேசவேண்டிய இடத்தில் பேசி மற்றவர்களை கவர்வதில் மிகுந்த கெட்டிக்காரர்கள். மனமாற்றம் உங்களுக்கு அடிக்கடி ஏற்படுவதே முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கும். அதை மட்டும் நீங்கள் மாற்றிக் கொண்டால், அதிர்ஷ்ட தேவதை உங்களை விட்டு பிரியாமல் இருப்பாள்.

ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஜென்மத்தில் கேது சஞ்சரிப்பதால், எதையும் ஆராய்ந்து முடிவெடுப்பதே நல்லது. சிந்திக்காமல் வாக்கு கொடுத்து விட்டால், பின்னர் அதை காப்பாற்றுவது அரிதாகும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம், பத்தாமிடத்து குருவின் பலம், ஏழாமிடத்து இராகுவின் வலிமை ஆகிய அனைத்தும் ஒன்று சேர்வதால், நீங்கள் செயற்பட நினைத்தாலும், செயற்படவிடாது. காரிய தடைகளை முறியடிக்க கடவுள் வழிபாடு ஒன்றுதான் கைகொடுக்கும்.

எனவே, ராகு - கேது ப்ரீதி, சனி ப்ரீதி போன்றவற்றை யோக பலம் பெற்ற நாளில் செய்தால், வாழ்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

**ஆரோக்கியத்தில் கவனம் தேவை!**

எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய் விருச்சிக ராசியில் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக மருத்துவச் செலவுகள் கூடலாம். மனக்கசப்பு தரும் செய்திகளை நண்பர்கள் கொண்டு வந்து சேர்ப்பர். பணப்பற்றாக்குறை ஏற்படும். பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வதே நல்லது. யாருக்கேனும். பணப்பொறுப்புகள் சொல்வதாக இருந்தால் யோசித்துச் சொல்ல வேண்டும். உத்தியோகம் தொழிலில் எதிர்பாராத மாற்றம் உருவாகும். உங்களுக்கு கீழே பணிபுரிபவர்கள் உங்களை மீறி சில காரியங்களைச் செய்யலாம். உறவினர்களை நம்பி செய்யும் காரியங்கள் பாதியிலேயே நிற்கும். அங்காரகனை ஆழ்ந்து வழிபட்டால் தங்கு, தடைகள் அகலும்.

**இடம், பூமி வாங்கும் நேரம்!**

எதிர்வரும் 31ஆம் திகதி விருச்சிக ராசியில் புதன் சஞ்சரிப்பது யோகம் தான். கேந்திராதி பத்ய தோஷம் பெற்ற கிரகம் ஆறில் சஞ்சரிக்கும் பொழுது, யோகத்தை வழங்கும். நீண்ட நாட்களாக நீங்கள் போட்ட திட்டங்கள் நிறைவேறும். நிச்சயிக்கப்பட்ட சில காரியங்களை மாற்றியும் அமைப்பீர்கள். இடம், பூமி வாங்குவதில் ஆர்வம் கூடும். இத்தனை நாட்களாக வீடு பார்த்தும் எதுவும் அமையவில்லையே என கவலைப்பட்டவர்கள் இனி மகிழ்ச்சி அடையும் விதத்தில் சொத்துக்கள் வாங்கும் வாய்ப்பு கிட்டும்.

**கும்ப குருவின் ஆதிக்கம்!**

நவம்பர் 7இல் மீண்டும் கும்ப ராசிக்கு குரு வருகிறார். அதுவும் வக்ரத்தோடு வருகிறார். அதோடு சுக்ரனும் வக்ர நிலையிலேயே துலாமில் சஞ்சரிக்கிறார். வக்ரம் பெற்ற குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம்கிடைக்கும். தொழில் முன்னேற்றம் உண்டு.

இம்மாதம் ஜென்ம கேதுவின் ஆதிக்கத்தால் சிறப்புகள் வந்து சேர விநாயகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது. வேதனைகளைக் குறைப்பது விநாயகர் வழிபாடுதான்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

அசதியின் பிடியில் சிக்கி, அதிக ஓய்வு தேவைப்படும் மாதமாக இம்மாதம் அமைய போகிறது. எனவே, அலைச்சல்களை குறைத்துக் கொள்ளுங்கள். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். உறவைப் பலப்படுததினால், உற்சாகத்தோடு பணிபுரிய இயலும். மாதக் கடைசியில் கருத்து வேறுபாடுகள் அகலும். காரிய வெற்றிக்கு குல தெய்வ வழிபாட்டை மேற்கொள்வதோடு குருவிற்குரிய சிறப்பு பூஜைகளிலும் கலந்து கொள்ளுங்கள்.




புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**மற்றவர்களால் முடிக்க முடியாத காரியத்தைக்கூட எளிதில் முடித்துக காட்டும் கடக ராசி நேயர்களே!**

கற்பனை வானில் சிறகடித்துப் பறப்பவர்கள் நீங்கள். கடந்த கால நிகழ்ச்சிகளை அதிகம் அசை போட்டு பார்ப்பீர்கள். நம்பிக்கை தளராமல் முயற்சியின் மீது முயற்சி செய்து எப்படியாவது உயர்ந்த நிலையை அடைந்து விடுவீர்கள். மற்றவர்களின் பாராட்டுக்களை பெறவேண்டுமென்று துடிப்பீர்கள். அரசியல் ஈடுபாடு உங்களுக்கு அதிகமாயிருக்கும். பதவிகள் உங்களைத் தேடி வரும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள்.

ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாத தொடக்கத்திலேயே சந்திராஷ்டமம் ஏற்படுகிறது. விரய ஸ்தானத்தில் கேது, ஆறில் ராகு, வக்ர குருவின் பார்வை பலம் இவற்றிற்கு இடையில் சிக்கி இருக்கும் உங்கள் ராசியைப் பொறுத்த வரையில் யோசித்துச் செயல்படுவதே யோகங்களைக் கொடுக்கும் என்று சொல்லலாம். உறவு பகையாகலாம். உடனிருப்பர்கள் விலகலாம். வரவு வந்த நிமிடமே செலவாகி விடும்.

வளர்ச்சிப் பாதை புலப்பட வேண்டுமானால், வழிபடும் தெய்வங்களை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். சர்ப்ப சாந்தி, சந்திர வழிபாடு, கிரிவலம் போன்றவற்றில் ஆர்வம் காட்டினால் அற்புத வாழ்க்கையை நீங்கள் அமைத்துக் கொள்ளலாம்.

**சிறப்பு தரும் செவ்வாய் பெயர்ச்சி!**

எதிர்வரும் 20ஆம் திகதி விருச்சிக ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். அதன் விளைவாக எதிர்பாராத சில நல்ல காரியங்களும் நடைபெறப் போகின்றன. சுகமாகப் பயணம் செய்ய புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சொல்லை செயலாக்கிகாட்ட நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். வள்ளல்களின் ஒத்துழைப்போடு வருங்காலத்தை நலமாக்கி கொள்ள தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். சென்ற மாதத்தில் பாதியில் நின்ற பணிகள் ஒவ்வொன்றாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

**கல்யாண கனவுகள் நனவாகும் நேரம்!**

எதிர்வரும் 31ஆம் திகதி விருச்சிக ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் பெருகும். அவர்களின் கல்யாண கனவுகளை நனவாக்குவீர்கள். குண்டுமணி அளவு கூட தங்கம் இல்லையே எப்படி கல்யாணம் நடத்துவோம் என்று நினைத்தவர்களுக்கு உறவினர்கள் கொடுத்து உதவி செய்ய முன்வருவர் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**கும்ப குருவின் ஆதிக்கம்!**

இதுவரை மீன ராசியில் வக்ர கதியில் இயங்கிய குரு, நவம்பர் 7ஆம் திகதி மீண்டும் கும்பராசிக்கு வருகிறார். இந்த கும்ப குருவின் ஆதிக்கம் கொடுக்கல், வாங்கல்களில் சில பிரச்சினைகளை கொடுக்கலாம். தொழில் மாற்றம், இடமாற்றங்களை உருவாக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட தூரத்தில் இடமாற்றங்கள் கிடைத்து நிம்மதியைக் குறைக்கலாம். முறையாக குரு வழிபாடு செய்வது நல்லது.

**சிவல்புரி சிங்காரம்**

இம்மாதம் தெசா புத்திக்கேற்ற தெய்வங்களை தேர்ந்தெடுத்து, அதற்குரிய அனுகூலம் தரும் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டு வந்தால் அமைதி கிடைக்கும். வராகி வழிபாடு வளம் சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம் மாதம் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. கொடுக்கல்–வாங்கல்களில் சில ஏமாற்றங்களைச் சந்திப்பீர்கள். முன்கோபத்தை தவிர்ப்பது நல்லது. வாரவழிபாடு, மாத வழிபாடு, என்று வரிசைப்படுத்தி வழிபடுவதோடு, பிரதோஷ காலத்தில் நந்தியையும் வழிபட்டு வந்தால் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்ல முடிவிற்கு வரும். மாதக் கடைசியில் விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். (தொடரும்)

# நலம் தரும் நவராத்திரி



## நவராத்திரி 7ஆம் நாள்

**சந்தோஷங்களை வழங்கும் சாம்பவி துர்க்கை வடிவம்**



கலைகளை நமக்கு வழங்குபவள் கலைமகள், அவள் கலைகளை வழங்குவதில் 'தாயாக' இருந் தா லும் அவளைக் 'கலைமகள்' என்றே நாம் அழைக்கிறோம்! வெள்ளை உள்ளத்தை நாம் பெற்றிருக்க வேண்டுமென்று தான் அவள் வெள்ளைத் தாம ரை பூவில் அமர்ந்திருக்கிறாள்.

வா! நீ! என்றழைத்தால் ''வாணி'' நம் இல்லத்திற்கு வந்து விடுகிறாள். அவளிடம் அருளை தா! நீ! என்று கேட்டால் தந்து விடுகிறாள். அந்த ஞான சக்தியை வழிபடும் நாளாக ஏழாம் நாள் அமைகிறது.

இச்சா சக்தி, கிரியா சக்தியாக இருந்த தெய்வம் இப்பொழுது ஞானசக்தியாக மாறுகிறது. ஒருவனுக்கு ''ஞானம்'' கிடைத்து விட்டால் அவன் சொல்வதெல்லாம் வேத வாக்காக மாறுகிறது. மதிப்பும், மரியாதையும் உயருகிறது. இன்று கொலு மண்டபத்தின் நடுவில் அமைந்த தேவியின் வடிவத்தை சாம்பவி துர்க்கையாக அலங்கரிக்க வேண்டும்.

அந்த அலங்காரத்தில் பொற்கிரீடம் வைத்து ஒரு பாதம் தாமரை மலரில் இருக்கும் விதத்தில் வீணை வாசிக்கும் நிலையில் தேவியை வீற்றிருக்கச் செய்ய வேண்டும். தேவியின் கழுத்தில் பூச்சரங்களும், பாச்சரங்களும் அணிவிப்பதோடு மஞ்சள் வண்ண ஆபரங்களையும், மாணிக்க பதக்கம், வைடூரியம் ஆகியவற்றை அணிவிக்க வேண்டும்.

இன்று ஒரு முறை செய்யும் வழிபாடு நூறுமுறை செய்யும் வழிபாட்டிற்கு சமமாகும். ''பிலகரி'' ராகத்தில் தேவிக்குரிய பாடல்களைப் பாடினால் பெருமைகள் வந்து சேரும்.

கொலு பொம்மைகளை அடுக்கும் பொழுது ''வாக்கில் வளம் தரும் கலைவாணி!'' என் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவாய் நீ! என்று பாடுவது நல்லது.

சிவல்புரி சிங்காரம்

# வானில் பயணித்த இளைஞரை விலங்குமாட்டி ஆயிரம் ரூபாவை அபகரித்த பொலிஸார்

(கொழும்பு)

கொழும்பு மற்றும் கட்டுநாயக்க விமான நிலையம் என்பவற்றை அண்மித்ததாக அமைந்திருக்கும் சீதுவையில் வான் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவரை வழிமறித்த இரண்டு பொலிஸார் அவரது கையில் விலங்கை மாட்டி அவரிடமிருந்த ஆயிரம் ரூபாவை அபகரித்துச் சென்றுள்ளனர்.

கந்தானையிலிருந்து தனது நண்பன் ஒருவனைச் சந்திப்பதற்காக சீதுவைக்குச் சென்று கொண்டிருந்த ஒரு இளைஞருக்கே அந்த அநியாயம் நேர்ந்துள்ளதாகவும் நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் குறித்த இரண்டு பொலிஸாரும் சிவில் உடையில் மோட்டார் சைக்கிளொன்றில் சீதுவைக்கு வந்தே குறித்த கொள்ளையை மேற்கொண்டிருந்தனர்.

தாம் இரகசியப் புலனாய்வுப் பொலிஸார் என்பதாக அறிமுகப்படுத்திக் கொண்டு அந்த இளைஞரை அச்சுறுத்திய அவர்கள், இளைஞரின் கையில் விலங்கை மாட்டி பயமுறுத்தி அவரிடமிருந்த ஆயிரம் ரூபாவை அபகரித்துக் கொண்டபின் விலங்கை அகற்றி அவரைப் போக விட்டுள்ளனர்.

அந்த இளைஞன் சற்று தூரம் சென்ற நிலையில் சீதுவை பொலிஸ் நிலைய அதிகாரிகள் சிலைரைக் கண்டு அவர்களிடம் முறையிட்டுள்ளார்.

உடனடியாகச் செயற்பட்ட அவர்கள் பிரதேசத்தில் சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட போது மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்று கொண்டிருந்த இரண்டு பொலிஸாரும் மாட்டிக்கொண்டுள்ளனர்.

அவர்களைச் சோதனையிட்டபோது அவர்களிடமிருந்த கை விலங்கும் அபகரிக்கப்பட்ட ஆயிரம் ரூபாவும் கைப்பற்றப்பட்டவுள்ளதுடன் அவர்கள் சாதாரண பொலிஸ் கான்ஸ்டபிள்கள் என்ற விடயமும் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்களான இரண்டு பொலிஸாரும் நேற்று முன்தினம் நீர்கொழும்பு நீதவான் முன் னிலையில் ஆஜர் செய்யப் படவுள்ளனர். (ஸ்ரீ-2)

## பொலிஸ்மா அதிபரின் பெயரைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட நபர் கைதானார்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் பெயரைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமொன்றின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் பெயரைப் பயன்படுத்தி ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்து குறித்த சந்தேக நபர் பலரிடம் பணம் பெற்றுக்கொண்டுள்ளார்.

கனடாவிற்கு ஆட்களை அனுப்பி வைப்பதாகத் தெரிவித்து பல இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

இவ்வாறு கனடாவில் தொழில் வாய்ப்பு பெற்றுத் தருவதாகத் தெரிவித்து எட்டுபேரை இந்தியாவிற்கு அழைத்துச் சென்று நிர்க்கதியான நிலையில் விட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிர்க்கதியான நிலைக்கு ஆளான மூன்று பேர் சிரமங்களுக்கு மத்தியில் இலங்கைக்கு திரும்பி பொலிஸாரிடம் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் உருவம் பொறிக்கப்பட்ட மின் அஞ்சல்களை அனுப்பி மக்களை குறித்த நபர் ஏமாற்றியுள்ளார்.

குறித்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனம் பொலிஸ்மா அதிபரின் அனுசரணையுடன் இயங்கி வருவதாக அவர் பிரசாரம் செய்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் சிரமங்களுக்கு மத்தியில் குறித்த முகவர் நிறுவன உரிமையாளரை இந்தியாவிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தங்களது கஷ்டங்களை தெரிவித்த போது வெள்ளை வானில் கடத்தப் போவதாகவும் பொலிஸ்மா அதிபர் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் உங்களை கைது செய்வார் எனவும் வேலை வாய்ப்பு முகவர் நிறுவன உரிமையாளர் பாதிக்கப்பட்டவர்களை மிரட்டியுள்ளார்.

குறித்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனத்தின் கணனி உள்ளிட்ட உபகரணங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

புறக்கோட்டைப் பகுதியில் இந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனம் இயங்கி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபரினால் மோசடி செய்யப்பட்டவர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## பாதுகாப்புச் செயலர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதானோர் விளக்கமறியலில்

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குறித்த சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புளி தெரிவித்ததுள்ளார்.

கொட்டாஞ்சேனைக் பொலிஸார் குறித்த சந்தேக நபர்களை நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த குறித்த சந்தேக நபர்களை தொடர்ந்தும் 26ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திய நபருக்கு குறித்த சந்தேக நபர்கள் உதவிகளை வழங்கியுள்ளதாக பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

(ஸ்ரீ-2)

## சவுதியிலுள்ள ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கைப் பணியாளர்களின் தொழிலுக்கு ஆபத்து

### ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பணியாற்றி வரும் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கைப் பணியாளர்களின் தொழில்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தி பணியாளர்களின் தொழில்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

சவுதி தொழில் வாய்ப்பு பிணக்கு தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்து அமைதியைப் பேணி வந்தால் இலங்கைப் பணியாளர்கள்தொழில் வாய்ப்புக்களை இழக்க நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் வருடாந்தம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் நட்டம் ஏற்படலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சவுதி அரேபியாவில் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கைப் பணியாளர்கள் கடமையாற்றி வருவதாகவும் வருடாந்தம் ஐம்பதாயிரம் பணியாளர்கள் புதிதாக வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வதாகவும் தெரிவித்துள்ளார்.

அல்பியா மற்றும் சனாரீட் ஆகிய முக்கிய தொழில் முகவர் நிறுவனங்களுடன் அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை உரியமுறையில் நடைமுறைப் படுத்தப்படாத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## 2010.10 14 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖ 1066 - இங்கிலாந்தில் "ஹாஸ்டிங்ஸ்" என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் முதலாம் வில்லியமின் படைகள் இரண்டாம் ஹரோல்ட் மன்னனைக் கொன்றனர்.
- ❖ 1322 - ஸ்கொட்லாந்தின் முதலாம் ரொபேர்ட் பைலாண்ட் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் இங்கிலாந்தின் இரண்டாம் எட்வேர்ட் மன்னனைத் தோற்கடித்தான். ஸ்கொட்லாந்தின் விடுதலையை எட்வேர்ட் ஏற்றுக் கொண்டான்.
- ❖ 1586 - ஸ்கொட்லாந்தின் முதலாம் மேரி இங்கிலாந்தின் முதலாம் எலிசபெத்துக்கு எதிராக சதி மேற்கொண்டதாக குற்றஞ் சாட்டப்பட்டாள்.
- ❖ 1758 - ஏழாண்டுப் போர்: ஆஸ்திரியா பிரஷ்யாவை வெற்றி கொண்டது.
- ❖ 1773 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் தேயிலைக் கப்பல் மேரிலாந்தில் எரிக்கப்பட்டது.
- ❖ 1806 - முதலாம் நெப்போலியன் புருசிய இராணுவத்தை தோற்கடித்தான்.
- ❖ 1888 - Roundhay Garden Scene என்ற முதலாவது அசையும் படத்தை லூயி லெ பிரின்ஸ் தயாரித்தார்.
- ❖ 1903 - யாழ்ப்பாணத்தின் SS Jaffna என்ற பயணிகள் கப்பல் நெடுந்தீவுக்கு பயணித்தது.
- ❖ 1912 - முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி தியொடோர் ரோசவெல்ட் விஸ்கொன்சின் மாநிலத்தின் மில்வாக்கி நகரில் வைத்து சுடப்பட்டார்.
- ❖ 1913 - ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெற்ற நிலக்கரிச் சுரங்க விபத்தில் 439 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖ 1925 - டமாஸ்கசில் பிரெஞ்சுக்காரர்களுக்கெதிரான போராட்டம் ஆரம்பமாயிற்று.
- ❖ 1926 - சிறுவர் நூல் வின்னீ-த-பூ (Winnie-the-Pooh) வெளியிடப்பட்டது.
- ❖ 1933 - நாசி ஜெர்மனி தேசங்களின் அணியில் இருந்து விலகியது.
- ❖ 1939 - இரண்டாம் உலகப்போர்: ஜெர்மனியின் நீர்மூழ்கிக கப்பல் பிரித்தானியக் கடற்படையினரின் "ரோயல் ஓக்" என்ற போர்க்கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது. 800 மாலுமிகள் கொல்லப்பட்டனர்.
- ❖ 1943 - போலாந்தில் நாசிகளின் "சோபிபோர்" வதைமுகாமில் இருந்த 600 கைதிகள் கிளர்ச்சியை மேற்கொண்டதில் 11 நாசிகள் கொல்லப்பட்டனர். முன்னூறுக்கும் அதிகமான கைதிகள் சிறையை உடைத்துத் தப்பினர்.
- ❖ 1956 - இந்தியத் தலித் தலைவர் அம்பேத்கர் தனது 3 இலட்சத்து85ஆயிரம் ஆதரவாளர்களுடன் பௌத்தத்திற்கு மதம் மாறினார்.
- ❖ 1962 - கியூபாவுக்கு மேல் பறந்த அமெரிக்க U-2 விமானம் சோவியத் அணு ஆயுதங்களைப் படம் பிடித்தது.
- ❖ 1964 - லியோனிட் பிரெஷ்னெவ் சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதியாகவும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் நாயகமும் ஆனார். நிக்கிட்டா குருசேவ் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- ❖ 1964 - ஐக்கிய அமெரிக்காவின் மனித உரிமைப் போராளி மார்ட்டின் லூதர் கிங் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- ❖ 1968 - விண்ணிலிருந்தான முதலாவது நேரடி தொலைக்காட்சி அஞ்சல் அப்போலோ 7 விண்கலத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டது.
- ❖ 1973 - தாய்லாந்தில் பல்கலைக்கழக மாணவர்கள் மக்களாட்சிக்காகப் போராட்டத்தில் ஈடுபட்டதில் 77 பேர் கொல்லப்பட்டு 857 பேர் காயமடைந்தனர்.
- ❖ 1987 - டெக்சாசில் ஜெசிக்கா என்ற 18-மாதக் குழந்தை கிணறு ஒன்றில் வீழ்ந்தது. 58 மணி நேரத்தின் பின்னர் உயிருடன் மீட்கப்பட் டது. இந்த மீட்புப் போராட்டம் தொலைக்காட்சியில் நேரடியாகக் காண்பிக்கப்பட்டது.


### பிறப்புகள்

- ❖ 1643 - முதலாம் பகதூர் ஷா, இந்தியாவின் முகலாய மன்னன் (இ.1712)
- ❖ 1884 - சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா, இலங்கையில் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தியவர், சட்டத் தரணி (இ.1969)
- ❖ 1890 - டுவைட் டி.ஐசனாவர், ஐக்கிய அமெரிக்காவின் 34 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1969)
- ❖ 1927 - அஞ்சலி தேவி, தமிழ், தெலுங்கு திரைப்பட நடிகை
- ❖ 1930 - மொபுட்டு செசெ செக்கோ, சயீர் நாட்டின் குடியரசுத் தலைவர் (இ.1997)
- ❖ 1942 - சிவசங்கரி, தமிழக எழுத்தாளர்
- ❖ 1978 - அஷர் ரேமண்ட், அமெரிக்கப் பாடகரும் நடிகரும்

### இறப்புகள்

- ❖ 1803 - அய்மே ஆர்கண்ட், சுவிற்ஸர்லாந்து இயற்பியலாளர் (பி.1750)
- ❖ 1981 - கே.பி.ஹரன், தமிழ்ப் பத்திரிகையாளர் (பி. 1906)
- ❖ 2005 - சுந்தர ராமசாமி, தமிழ் எழுத்தாளர் (பி. 1931)
- ❖ 2009 - கி.பி.முத்தம்மா, இந்தியப் பெண் சாதனையாளர் (பி. 1924)

### 1948 - இலங்கையின் முதலாவது நாடாளுமன்றம் கூடியது.



# இலங்கைத் தமிழ் ஆய்வில் பெண்கள்

1

**கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கடந்த 2, 3, 4 ஆம் திகதிகளில் நடைபெற்ற தமிழ் இலக்கிய விழா ஆய்வரங்கில் அருட்திரு தமிழ்நேசன் அடிகளாரால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது**

பெண்களின் வாழ்வியலும் பெண்கள் பற்றிய பார்வையும் இன்று துரித மாற்றம் கண்டு வருகின்றன.ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று ஒரு காலம் இருந்தது.அதனால் வீட்டுக்குள்ளே பெண்களைப் பூட்டி வைத்தனர்.ஆறு தசாப்தங்களுக்கு முன்பு வரை வசதியுள்ள சில பெண்களைத் தவிர ஏனையோர் பள்ளிக்கூடத்தையே எட்டிப் பார்த்திராத வெறும் "கை நாட்டுக்காரர்'களாகவே இருந்தனர். சமுதாயத்தின் சரி பாதிப்பேரான பெண்கள் உரிமைகளற்ற பொம்மைகளாகவே விளங்கினர்.

ஆனால் இந்நிலை துரிதகதியில் மாற்றம் கண்டது.சென்ற அரை நூற்றாண்டு காலத்தில் பெண்களின் சமநிலை படிப்படியாக கணிசமான அளவுக்கு மாறிவந்துள்ளது.

அதனால் பட்டங்கள் ஆள்வதிலும் சட்டங்கள் செய்வதிலும்' கூட பெண்கள் இன்று ஈடுபட்டு பிரகாசித்து வருகின்றனர். மருத்துவம், தொழில்நுட்பம், அறிவியல், கல்வி, மேடைப்பேச்சு, சமூகசேவை; இலக்கியம், நாடகம்,இசை, நிர்வாகம், இதழியல், ஒலிபரப்பு போன்ற துறைகளில் தமது ஆற்றல்களையும் அறிவையும் பயன்படுத்தி அத்துறைகளில் தமது முத்திரையைப் பதித்து வருகின்றனர். இந்த வகையில் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் பெண்களின் முயற்சிகளை ஆய்வுக்குட்படுத்தும் இவ்வாய்வரங்கில் பெண்களின் ஆய்வு முயற்சிகளை இனம் காண்பதாக இக் கட்டுரை அமைகிறது.

பொதுவாக தமிழ் இலக்கியப் பரப்பில்- குறிப்பாக இலங்கைத் தமிழ் இலக்கியத் தளத்தில்- ஆய்வுத் துறையில் மேலெழும் ஆண்களின் பெயர்களோடு ஒப்பிடுகையில் பெண்களின் பெயர்கள் மிகவும் குறுகியதே. இலங்கையிலே தமிழில் பெண்களின் ஆய்வு முயற்சிகள் பற்றிய முழுமையான தேடல் பெரிய அளவில் மேற்கொள்ப்படாத நிலையில் இந்தக் கட்டுரையானது இந்த விடயம் தொடர்பான ஒரு ஆரம்ப முயற்சியாக மட்டுமே இருக்கும் எனக் கருதுகிறேன்.

### பெண்களின் ஆய்வு முயற்சிகளை வகைப்படுத்தல்

இலங்கைத் தமிழ் ஆய்வில் பெண்களுடைய முயற்சிகளை நோக்கும் போது சிலர் பல்கலைக்கழக மட்டத்திலே ஆய்வுசெய்ய வேண்டிய கட்டாய சூழ்நிலையில் கல்விப் புலமைசார் தேவைகளின்அடிப்படையில் (Academical Needs) ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். சிலர் தனது தனிப்பட்ட ஆர்வம், விருப்பம்(Personal Interest) காரணமாக ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். இன்னும் சிலர் பெண்கள் சார்ந்த சில அமைப்புகளில் தம்மை இணைத்துக் கொண்டு அமைப்பு ரீதியாக ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இதில் பல்கலைக்கழகம் சார்ந்து ஆய்வில் ஈடுபடுகின்றவர்களும் உண்டு. பல்கலைக்கழகம் சாராமல் தனிப்பட்ட முறையில், ஆய்வில் ஈடுபடுகின்றவர்களும் உண்டு.

இலங்கையிலே தமிழ் ஆய்வில் பெண்களுடைய முயற்சிகளை இரண்டு வகையாக வேறுபடுத்தி இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

1. பெண்ணிய ஆய்வாளர்கள்
2. பல்துறை ஆய்வாளர்கள்

### 1.பெண்ணிய ஆய்வாளர்கள்

இலங்கையிலே பெண்ணியம் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்ட பெண்களாக கலாநிதி செல்வி.திருச்சந்திரன், கலாநிதி சித்திரலேகா மௌனகுரு, திருமதி.சாந்தி சச்சிதானந்தம், திருமதி. பத்மா சோமகாந்தன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

### கலாநிதி செல்வி.திருச்சந்திரன்

'இலங்கையிலே பெண்ணிய ஆய்வாளர் என்று கருதக்கூடிய நிலையில் உள்ளவர்களில் கலாநிதி செல்வி திருச்சந்திரன் குறிப்பிடத்தக்கவர் எனலாம்.

இவர் புகழ்பூத்த கல்விமானும் சமூக சீர்திருத்தவாதியுமான பெரியார் ஹண்டி பேரின்பநாயகம் அவர்களின் மகளாவார்.

இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக் கழகங்களின் பெண்கள் கூட்டமைப்பு, "வேலைவாய்ப்பற்ற கலைப் பெண் பட்டதாரிகள் செயற்றிட்டம், 'பெண்ணின் குரல்', தமிழ், ஆங்கில இதழ்கள் முதலிய நிறுவனங்களில் முக்கிய பொறுப்புகளை வகித்த இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகுந்த புலமை உள்ளவர். இரு மொழிகளிலும் பெண்ணியம் சார்ந்த பல நூல்களை எழுதியுள்ளார்.

'தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண் நிலை நோக்கு, 'பெண்ணுரிமைகளின் பரிமாணங்களும் பெண்ணடிமையின் விளக்கமும்', 'சமூக விஞ்ஞானக் கருத்தியலில் பால்நிலைப்பாடு', 'ஈ.வே. பெரியாரின் உரைகளில் சாதி,வர்க்க, பால்வகை வேறுபாடுகளும் கலாசாரமும்', 'பெண்களின் வாய்மொழி இலக்கியம்' போன்றவை இவருடைய தமிழ்நூல்களில் குறிப்பிடத்தக்கன.

' நிவேதினி' என்ற சஞ்சிகையில் இவர் எழுதியுள்ள பெண்ணிய ஆய்வுக் கட்டுரைகள் பல . அவற்றில் சில பின்வருமாறு:

' யாழ்ப்பாணச் சமூகத்தின் கருத்தியலும் கட்டமைப்புக்களும் - நிர்ணயிக்கும் பால் நிலைப்பாடு', ' பால்நிலச் சமத்துவத்துக்கும் மரபுவழி நோக்கலுக்கும் உள்ள சில முரண்பாடுகள்', ' பக்தியின் மறுபக்கம் பெண்களின் மறுதலிப்புகளா? ' தேச வழமைச் சட்டத்தின் சமூகப் பரிமாணங்களும் யாழ்ப்பாணப் பெண்களின் சமூகப் பாங்கும்' ' மனித உரிமைக் கல்வியும் பெண்களை ஆக்க வலுவாக்கலும்'

'பெண் விடுதலை வாதத்தின் பிரச்சினை மையம் -அது இரு மேலைத்தேய கோட்பாடா? ' என்ற தனது நூலில். செல்வி திருச்சந்திரன் அவர்கள் இப்படிக் கூறுகின்றார்.

**அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்**

"பெண்ணினத்தை தட்டி எழுப்பி அவர்களின் துன்பகரமான வாழ்க்கை முறைகளை அவர்களுக்கு உணர்த்த வேண்டியதன் முக்கியத்துவத்தை நாம் உணர வேண்டும்.அதே அளவில் ஆண் மக்களைக் கூவி அழைத்து ஏன் இந்த அநியாயம்?, ஏன் இந்த அடக்குமுறை? ஏன் இந்தப் பாரா முகம்? என்றும் நாம் கேட்கவேண்டும். உலகெங்கும் பெண் விடுதலைக்குரல்கள் எழும்பியுள்ள நேரத்தில் கீழைத்தேய நாடுகளாகிய பிலிப்பைன்ஸ்,தாய்லாந்து, வங்காள தேசம் , இந்தியா போன்ற நாடுகளில் மிகத் தீவிர பெண் விடுதலைப் பத்திரிகைகளும் ஆய்வுக் கட்டுரைகளும் வெளி வருகின்றன. இந்த ரீதியில் முதலாவதாக பெண் விடுதலைவாதம் மேலைநாட்டுக்குரியதன்று. என்பதை தெளிவுபடுத்த முற்படுகிறேன்" என்கிறார். (தொடரும்)

## நீதிமன்றம்,பொலிஸ், சட்டநிர்வாக துறைகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும்

### அமைச்சர் டியூகுணசேகர தெரிவிப்பு



(கொழும்பு) நீதிமன்றம்,பொலிஸ் மற்றும் சட்ட நிர்வாகம் போன்ற துறைகளில் காலத்திற்கேற்ற மாற்றங்கள் கொண்டு வரப்படாவிடின் எதிர்பார்க்கும் இலக்குகளை அடைய முடியாமல் போய்விடும்.156 வருடகால பழைமை வாய்ந்த சிந்தனைகளால் தற்போது நாட்டிற்கு எவ்விதமான பயனும் ஏற்படப் போவதில்லை என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

கொழும்பு வெலிக்க்டை மெகசின் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நவராத்திரி பூஜையின் பின்னர் உரையாற்றுகையிலேயே அமைச்சர் டியூ குணசேகர மேற்கண்டவாறு கூறினார். இவர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மத ரீதியானதும் தேசிய ரீதியானதுமான நவராத்திரி பூஜை போன்றவை நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு முக்கியமானவையாகும். சகல இனமக்களுக்கும் இடையிலான ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டிய இக்காலகட்டத்தில் மதரீதியிலான இவ்வாறான நிகழ்வுகள் முக்கியம் பெறுகின்றன.

நவீன கால கட்டத்திற்கு ஏற்றவகையில் நமது சிந்தனைகளிலும் செயல்களிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இலங்கையில் உள்ள சிறைச்சாலைகள் புதுப் பொலிவு பெறவேண்டும்.

சுமார் 156 வருடம் பழமைவாய்ந்த சிந்தனைகளால் நாட்டிற்கோ, சிறைச்சாலைகளுக்கோ, கைதிகளுக்கோ எவ்விதமான நன்மையும் கிடைக்கப் போவதில்லை. எந்தக் குற்றவாளிகளையும் கைதியாகப் பார்க்கக் கூடாது.

அதற்கு ஏற்றவகையில் நீதிமன்றம், பொலிஸ் மற்றும் நிர்வாகம் மாற்றியமைக்கப்படவேண்டும். அப்போதுதான் கைதிகளை விரைவில் சிறந்த பிரஜைகளாக்க முடியும்.அப்போதுதான் எமது இலக்குகளை அடைய முடியும் எனக் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்கும் கால எல்லை 30 ஆம் திகதி வரை நீடிப்பு

(கொழும்பு)

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்கும் கால எல்லை இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிரதேசத்தில் புழக்கத்திலுள்ள சட்டவிரோத ஆயுதங்களை இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அப்பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்கள் மற்றும் கோயில்களின் ஊடாக ஒப்படைக்குமாறு கல்முனை பொலிஸாரினால் கோரப்பட்டிருந்தது.

ஆயினும் குறிப்பிட்ட காலப்பகுதியில் இப்பிரதேசத்திலிருந்து ஒரு ஆயுதம் மாத்திரமே ஒப்படைக்கப்பட்டிருப்பதால் இதற்கான காலக்கெடு இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என கல்முனை பொலிஸ் நிலையத்தின் பெருங்குற்றப்பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர் எஸ்.எம். ஸதாத் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## வாணிவிழா நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் மீசாலை பொது நூலகக் கிளையின் வாணிவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மீசாலை பொதுநூலக மண்டபத்தில் கோலாகலமாக நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2-29)



யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களால் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டை கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட yarl aid அமைப்பு ஆனைக்கோட்டையில் இயங்கும் யா/ மயிலிட்டி றோ.க.த.க பாடசாலை மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கு காலணிகளும் அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்களும் வழங்கினர். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கைலாசநாதன் மாணவர் ஒருவருக்கு காலணிகளை வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் திருமதி எல். அருளையா ஆகியோர் இருப்பதையும் yarl aid திட்ட அலுவலர் ர.தர்மினி உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்







யாழ். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்ற போது விருந்தினர்கள் அழைத்து வரப்படு வதையும் பிரதம விருந் தினராகக் கலந்துகொண்ட மகா ஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ. கணகசபாபதி மற்றும் கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் ஆகியோர் உரை யாற்றுவதையும் மகாஜனன் நூற் றாண்டு மலரின் ஆய்வுரையினை கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பாலமுரளி)

## அரசாங்க மருத்துவர்களின் சம்பளத்தை ரூ. 2 இலட்சமாக உயர்த்த கோரிக்கை

(கொழும்பு)

தங்களது சம்பளத்தை 2 இலட்சம் ரூபா வாக உயர்த்துமாறு அரசாங்க மருத்துவர் கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தங் களது சம்பளத்தை 40 வீதத்தினால் உயர்த் துமாறு கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய மாதாந்த சம்பளத்தை 2 இலட்சம் ரூபா வரையில் உயர்த்துமாறு அர சாங்க மருத்துவர்கள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் பிமந்த குணசேரக கோரிக்கை விடுத் துள்ளதுடன் அடுத்த 2011 ஆம் ஆண்டுக் காக நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் இந்தச் சம்பள உயர்வு நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றி வரும் தொழில்சார் தகைமையுடைய உயரதி காரிகளை தொடர்ச்சியாக அரசாங்க சேவை யில் ஈடுபடுத்த வேண்டுமாயின் கூடிய சம் பளம் வழங்கப்படவேண்டுமெனவும் போதிய ளவு சம்பளம் கிடைக்காத பட்சத்தில் வெளி நாடுகளிலும் பிரபல தனியார் வைத்திய சாலைகளிலும் கடமையாற்ற மருத்துவர்கள் முனைப்புக் காட்டுவார்கள் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்க வைத்தியசாலையில் கடமை யாற்றும் விசேட நிபுணத்துவ மருத்துவர் ஒருவர் 42 ஆயிரம் ரூபாவிற்கு மேலதிக மாக சம்பளம் பெற்றுக்கொள்ள முடியாது என வும் சாதாரண மருத்துவர்கள் 26 ஆயிரம் ரூபாவிற்கு மேலாக சம்பளம் பெற்றுக் கொள்ள முடியாது எனவும் தெரிவிக்கப் படுகிறது.

அரச சேவையில் உயர்பதவியை வகிக் கும் அமைச்சுத் தொழிலாளர்களின் உச்ச பட்ச சம்பளம் 47 ஆயிரத்து 515 ரூபா எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகக்குறைந்த தரமுடைய அரசாங்க ஊழியர் ஒருவரின் சம்பளம் 11 ஆயிரத்து 700 ரூபா எனவும் அரசாங்க சேவையில் நீண்ட காலமாக சம்பள முரண்பாடு காணப் பட்டு வரு வதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஸ்ரீ-2)

## மானிப்பாய் இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையாக தரம் உயர்வு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி கடந்த 11ஆம் திகதியில் இருந்து தேசிய பாடசா லையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இத்தகவலை தேசிய பாடசாலைகளின் பணிப்பாளர் பாடசாலை அதிபருக்கு அறிவித் துள்ளார். (ஸ்ரீ-2)

## நாகர்கோயில்,மருதங்கேணி வீதியை மக்கள் போக்குவரத்துக்கு திறக்க கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில், மரு தங்கேணி வீதியை மக்கள் போக்கு வரத் திற்கு திறந்து அரசாங்கம் அப் பகுதியில் மீள் குடியேற்றம் இயல்பு நிலையை ஏற்படுத்த வேண்டு மென தமிழ்தேசிய விடுதலை முன் னணியின் பொதுச் செயலாளர் எம். கே.சிவாஜி லிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மீள்குடியேற்ற அமைச்சர் மற்றும் படை உயரதிகாரிகளு டன் ஏற்கனவே சந்திப்புக்களை நடத்தியதா கவும் மீண்டும் இது தொடர்பில் வலியுறுத்த விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டதன் பின்னர் அரச ஊழியர்கள் நாகர்கோயில் பாதை ஊடாக மருதங்கேணிப் பகுதிக்கு செல்வதற்கு அனு மதிக்கப்பட்டு வந்தனர்.

ஆனால், தற்போது மீண்டும் அப்பகுதி யில் மிதிவெடிகள் உள்ளதாகக் கூறி அப் பாதையை போக்குவரத்துக்கு படையினர் தடைசெய்துள்ளனர். இதனால் வடமராட்சி கிழக்கு மக்கள் இப் பகுதியில் இருந்து பருத்தித் துறை பகுதிக்கு செல்வதற்கு தென்மராட்சி ஊடாகவே சென்று வருகின்றனர்.

இதனால் அப் பகுதிவாழ் மக்கள் பெரும் இடைஞ்சலை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே , இவ்விடயத்தில் அரச அதிகாரி களும் இதனோடு சம்பந்தப்பட்ட படைப் பிரி வினரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டு மென தமிழ்தேசிய விடுதலை முன்னணி யின் பொதுச் செயலாள் எம்.கே.சிவாஜிலிங் கம் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2-43)

## அரச பாடசாலைகளில் மும்மொழிக் கல்வி திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு திட்டம்

மும்மொழிக் கல்வித் திட்டத்தை அரச பாட சாலைகளில் அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச சிறுவர் தின வைபத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற் காக ஆயிரம் பாடசாலைகள் தரமுயர்த்தப் பட வுள்ளன. இப்பாடசாலைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் தரம் 6 முதல் கற்பிக்கப்படும்.

இதன் பயனாக சிறார்கள் இந்நாட்டி லுள்ள சகல சமுகத்தினருடனும் நல்லுற வைப் பேணுவதற்கு வழிவகுக்கும் என்று கூறினார்.

கடந்த காலங்களில் பாடசாலைகளை சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலை கள் என இன ரீதியாக பிரித்தவர்கள் அரசி யல் வாதிகள்தான்.

இதன் காரணமாகவே ஒரே நாட்டுப் பாட சாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் இன ரீதியாக சிந்திக்க முற்படுகின்றனர். இருந்த போதிலும் இந்நாட்டிலுள்ள சகல ருக்கும் ஒரேவிதமான கல்வியே வழங்கப் பட்டு வருவதாக அமைச்சர் சுட்டிக்காட்டி னார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டிற்குள் மும்மொழிகளு டன் செயற்படும் நாடாக இலங்கை உருவாக் கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த மாதம் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தொலைத்தொடர்பு மாநாட்டில் குறிப்பிட்டதை நினைவு கூர்ந்தார். (ஸ்ரீ-2)

## இணையத்தளம் மூலம் பொலிஸ் முறைப்பாடுகள்

பொலிஸில் முறைப்பாடு செய்ய விரும் பும் பொதுமக்கள் இணையத்தளம் மூலம் முறைப்பாடுகளை செய்வதற்கான திட்ட மொன்றை பொலிஸ் திணைக்களம் அறி முகப்படுத்தவுள்ளது.

www.police.lk என்ற இணையத் தளம் மூலம் எதிர்வரும் 18 ஆம் திகதியி லிருந்து இம்முறைப்பாடுகளை மேற்கொள் ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

## சிறையின் மேல் தளத்திலிருந்து பாய்ந்த கைதி மரணம்

திருகோணமலை சிறைச்சாலையின் மேல் தளத்திலிருந்து பாய்ந்த கைதியொரு வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்துள்ளதாக திருகோணமலை துறைமு கப் பொலிஸார் தெரிவித்தனர்.

திக்வெல்ல சியம்பலாப்பேவைச் சேர்ந்த 62 வயதான கருணாரட்ன என்பவரே இவ் வாறு உயிரிழந்துள்ளதாகவும் இக் கைதி உளவியல் பாதிப்புக்குள்ளாகியிருந்ததாகவும் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின் றன. (ஸ்ரீ-2)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபருக்கு ரூ.ஒரு இலட்சம் அபராதம்

(கரவெட்டி)


பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தி னால் கசிப்பு வழக்குகளில் குற்றவாளியாக முன்பு இனம் காணப்பட்ட குடத்தனை மேற் கைச் சேர்ந்த நபர் ஒருவர் மீண்டும் குறித்த காலப்பகுதியில் கசிப்பு மற்றும் கசிப்பு உற் பத்திப் பொருட்களை தன் வீட்டில் தம்வசம் வைத்திருந்த குற்றத்தின் பேரில் பருத்தி துறைப் பொலிஸாரினால் கைதுசெய்யப் பட்டு பருத்தித்துறை நீதிமனறத்தில் கடந்த 11 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கை யாழ். பருத்தித்துறை நீத வான் திருமதி. ஜோய் மகிழ்மகாதேவா விசா ரணை செய்தபோது சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளிக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதமும் இதைச் செலுத் தத்தவறின் ஒர வருடகால சாதாரண சிறைத் தண்டனையும் குறித்த காலப்பகுதியில் மீண் டும் குற்றத்தை செய்தமைக்கு ஒருவருட கடூ ழிய சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித் தார்.

(ஸ்ரீ-2-24)

# சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் முஷரப்பை கைது செய்ய வேண்டும்

## முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் வலியுறுத்தல்




(இஸ்லாமாபாத்)

வெளிநாட்டில் தங்கி இருக்கும் முன்னாள் அதிபர் முஷரப்பை சர்வதேச பொலிஸ் உதவியுடன் கைது செய்து பாகிஸ்தானுக்கு அழைத்து வந்த அவரை நீதிமன்றில் ஆஜர் படுத்த வேண்டும். அவரை தேசத்துரோக வழக்கை சந்திக்க வைக்க வேண்டும் என்று முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் வலியுறுத்தினார்.

பாகிஸ்தான் இராணுவத் தளபதியாக இருந்து இராணுவப்புரட்சி நடத்தி ஆட்சியை கைப்பற்றிய முஷரப் சர்வாதிகாரியாக இருந்து நாட்டை நிர்வகித்தார். பாராளுமன்ற தேர்தலுக்கு பின் ஜனாதிபதி பதவியை இழந்த அவர் இங்கிலாந்து நாட்டுக்கு சென்று விட்டார். லண்டன் நகரில் வசிக்கும் அவர் மீண்டும் தீவிர அரசியலுக்கு வரும் நோக்கத்துடன் அகில பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி தொடங்கி இருக்கிறார்.

இந்த நிலையில் அவரது தலைக்கு 100 கோடி ரூபாய் விலை நிர்ணயம் செய்து பலுச்சிஸ்தான் தலைவர் பக்தியின் மகன் தலால் பக்தி அறிவித்து இருக்கிறார். இதற்கிடையில் அவரை சர்வதேச பொலிஸ் உதவியுடன் கைது செய்து பாகிஸ்தான் கொண்டு வரவேண்டும் என்று பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி தலைவரும், முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீப் வலியுறுத்தி இருக்கிறார். அவர் இது தொடர்பாக கூறுகையில் முஷரப் மீது தேசத்துரோக வழக்கு தொடரப்பட வேண்டும். இந்த வழக்கை சந்திப்பதற்காக அவரை சர்வதேச பொலிஸ் உதவியுடன் கைது செய்து அழைத்து வரவேண்டும்.




அவர் 11 ஆண்டுகளுக்கு முன்பு இராணுவப்புரட்சி நடத்தி முஸ்லிம் லீக் அரசாங்கத்தை கவிழ்த்தார். அவர் இராணுவ ஆட்சியை நடைமுறைப்படுத்தினார். கார்கில் பகுதியில் நுழைந்து தவறான சாகசம் மூலம் 800 இராணுவ அதிகாரிகளையும் வீரர்களையும் காவு கொடுத்தார். கார்கில் போரை மக்களுக்கு தெரியாமல் மறைத்தார்.

பலுச் தேசிய தலைவர் நவாப் அக்பர் பக்தியை கொலை செய்தார். லால் மசூதி சம்பவத்தில் நூற்றுக்கணக்காணவர்களை கொன்று குவித்தார்.

முஷரப்பை கைது செய்து பாகிஸ்தானுக்கு கொண்டுவந்து அவர் மீது வழக்கு விசாரணை நடத்தி அவரை தண்டித்தால் தான் எதிர்காலத்தில் நெப்போலியத்தனமாக இராணுவ சர்வாதிகாரிகள் வராமல் தடுக்க முடியும்.

கார்கில் தவறுகளுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த கமிஷன் போட வேண்டும் என்று நவாஸ் ஷெரீப் கூறினார். (ஸ்ரீ-2)

## வடகொரியாவில் குடும்ப ஆட்சிக்கு ஆட்சித் தலைவரின் சகோதரர் எதிர்ப்பு

வடகொரியா தலைவர் இரண்டாம் கிம் ஜோங் பதவியை விட்டு இறங்கி தனது இளைய மகன் கிம் ஜோங் உன்னுக்கு வழி விட முடிவெடுத்துள்ளார். ஆனால் இதை கிம் ஜோங் உன்னின் மூத்த சகோதரர் கிம் ஜோங் நாம் எதிர்த் துள்ளார்.

மூன்று தலைமுறையாக எங்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களே வடகொரியாவின் ஆட்சிப் பீடத்தில் தொடர்ந்து அமர்ந்திருப்பதை நான் துளியும் விரும்பவில்லை. இதை நினைக்கையில் எனக்கு வருத்தமாக இருக்கிறது என்று அவர் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அதிகாரமிக்க தலைவர் பதவியில் அமருவதற்கு பிறருக்கும் வாய்ப்பளிக்கப்படுவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தனது இளைய மகனை ஆட்சிப் பீடத்தில் அமர்த்த முடிவெடுத்து அதற்கான பணியில் இரண்டாம் கிம் ஜோங் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில் அவரது மூத்த மகன் இப்படி எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது அவருக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் வட கொரியாவில் புதிய தலைமையை விரும்புபவர்களுக்கு இவர் கருத்து மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கிம் ஜோங் நாம் கூறிய கருத்துக்கு ஜப்பான் ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத் துள்ளன. தொலைக் காட்சிகள் கிம் ஜோங் கின் கருத்தை மீண்டும் மீண்டும் ஒளிபரப்பி வருகின்றன. (ஸ்ரீ-2)

# மியன்மார் தேர்தலில் சூகி வாக்களிக்க விரும்பவில்லை



(மியன்மார்)

மியன்மார் நாட்டில் அடுத்த மாதம் நடை பெறவுள்ள தேர்தலில் வீட்டு சிறையில் உள்ள ஜனநாயக கட்சித் தலைவர் ஆங் சாங் சூகி வாக்களிக்க விரும்பவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மியன்மார் நாட்டில் கடந்த 50 ஆண்டுகளாக இராணுவ ஆட்சி நடக்கிறது. கடந்த 1990 ஆம் ஆண்டு ஜனநாயக முறைப்படி நடந்த தேர்தலில் ஜன நாயக தேசிய லீக் கட்சி தலைவர் ஆங் சாங் சூகி அமோக வெற்றி பெற்றார். பாராளுமன்றில் மொத்தமுள்ள 485 இடங்களில் 392 இடங்களில் ஜனநாயக கட்சி வெற்றி பெற்றது.

ஆனால் இந்தக் கட்சியை ஆட்சிக்கு வரவிடாமல் இராணுவம் முடக்கியது. ஜனநாயக கட்சித் தலைவரை அதிபராக விடாமல் வீட்டு சிறையில் அடைத்தது. ஜனநாயக நடை முறையை பின் பற்றாத மியன்மார் மீது உலக நாடுகள் பொருளாதார தடை விதித்துள்ளன. இந்நிலையில் அடுத்த மாதம் 7 ஆம் திகதி மியன்மாரில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் ஆங் சாங் சூகி போட்டியிட முடியாத படி அவருக்கு எதிராக குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.


இராணுவ அரசு விதித்த நிர்ப்பந்தத்தால் சூகி கட்சியைச் சேர்ந்த சிலரே தேர்தலில் போட்டியிடுகின்றனர். எனவே ஆட்சியை பிடிக்கும் அளவுக்கு இந்த கட்சி வெற்றி பெற முடியாத அளவுக்கு இராணுவ அரசு காய்களை நகர்த்தியுள்ளது.

ஆங் சாங் சூகியின் வக்கீல் நியான்வின் குறிப்பிடுகையில், தேர்தலில் வாக்களிக்க ஆங் சாங் சூகிக்கு முழு உரிமை உண்டு. கடந்த 20 ஆண்டுகளாக வீட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள சூகிக்கு வாக்களிக்க அனுமதி கொடுத்தாலும் ஜனநாயகத்துக்கு விரோத மான முறையில் நடக்கும் இத்தேர்தலில் சூகி வாக்களிக்க மாட்டார் என தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



ரஷ்யா வந்திருந்த ஜேர்மன் ஜனாதிபதி கிறிஸ்டியன் உல்ஃப்(வலது), அவரது மனைவி ஆகியோரை அந்நாட்டு ஜனாதிபதி டிமிட்ரி மெத்வடேவ் மொஸ்கோ கிரம்ளின் மாளிகையில் வரவேற்றார்.

# நோபல் பரிசு பெற்ற அறிஞரின் மனைவிக்கு பொலிஸ் கெடுபிடி




சிறையில் உள்ள தனது கணவருக்கு நல்ல உணவு அளிக்கப்படுவதாக அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ள லியு ஜியாபோவின் மனைவி தெரிவித்துள்ளார்.

சீனாவில் ஜனநாயகம் கோரி போராடிய இலக்கியத்துறை பேராசிரியர் லியு ஜியா போவுக்கு 11 ஆண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அகிம்சை முறையில் மனித உரிமைக்காக போராடிய லியு ஜியாபோவுக்கு இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. சிறையில் அடைக்கப்பட்டுள்ள குற்றவாளிக்கு இந்த பரிசு அளிக்கப்பட்டதற்காக சீன அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் லியு ஜியாபோவின் மனைவி லியு ஜியா சுதந்திரமாக செயல்பட சீன அரசு கெடுபிடி விதித்துள்ளது. நோபல் பரிசு பெற்ற தகவலை கணவனிடம் தெரிவிப்பதற்காக கடந்த வாரம் ஜியா சிறைக்கு சென்றார்.

நோபல் பரிசு லியு ஜியாபோவுக்கு அறிவிக்கப்பட்ட பிறகு சிறையில் அவருக்கு தனியாக நல்ல உணவு அளிக்கப்படுவதாக ஜியா, வெளிநாட்டு செய்தி நிறுவனத்துக்கு தொலைபேசியில் பேட்டியளித்துள்ளார்.

இதுதொடர்பாக ஜியா கூறுகையில், இது நாள் வரை அவருக்கு மற்ற கைதிகளை போல தரமற்ற உணவு அளிக்கப்பட்டு வந்தது. தற்போது தனியாக இவருக்காக சிறைச் சாலையில் உணவு சமைத்து பரிமாறுகின்றனர். என் வீட்டை சுற்றிலும் பாதுகாப்பு வீரர்கள் தொடர்ந்து காவலில் ஈடுபட்டுள்ளனர். புதிய நபர்கள் யாரையும் அனுமதிப்ப தில்லை. என் சகோதரர்கள் மட்டுமே என் வீட்டுக்குள் அனுமதிக்கப்பட்டனர். மலிகைப் பொருட்கள் வாங்கவும் என் தாய் வீட்டுக்கு செல்லவும் பொலிசார் தங்கள் ஜீப்பில் அழைத்து செல்கின்றனர் என்றார். (ஸ்ரீ-2)



*100 இற்கும் மேற்பட்ட பெண்களை திருமணம் செய்து 200 குழந்தைகளுக்கு தந்தையான கென்யா நாட்டின் ஆஸன்டஸ் மாகாணத்தைச் சேர்ந்த டேஞ்சர் அகூகூ எனும் இந்த 94 வயது இளைஞர் உடல் நலக்குறைவால் இறந்து விட்டதாக ரீயூடர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.*

உங்களுக்கு சரியான ஆலோசனை வழங்கக் கூடிய மனிதர் இந்த உலகில் யார் இருக்கிறார்?
அவர் நீங்களே தான். – ஜேர்மனி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மண்டைதீவின் அபிவிருத்தி உறுதிசெய்யப்பட வேண்டும்

அமெரிக்க நிறுவனம் ஒன்று மண்டைதீவில் ஹோட்டல் அமைப்பதற்கான முதலீட்டு முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணத்து அதிகாரிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் கண்ணில் படாமல்போன மண்டைதீவை அமெரிக்கா கண்டறிந்தமை மன நிறைவைத் தருவதாகும்.

மண்டைதீவின் அபிவிருத்தி மற்றும் அங்கு ஏற்படுத்தக்கூடிய பறவைகள் சரணாலயம், இறால் வளர்ப்புத் திட்டம் பற்றி எல்லாம் இவ்விடத்தில் பல தடவைகள் எழுதியிருந்தோம்.

ஆனால் எங்கள் அதிகாரிகளோ! அல்லது அரசியல்வாதிகளோ எவரும் அதுபற்றி அலட்டிக் கொள்ளவேயில்லை.

அறிவில்லார்க்குரைப்பவர் அவரிலும் பேதை என்ற தமிழ்ப் பழமொழியின் தத்துவம் உணர்ந்து நாமும் மௌனமாக இருந்தோம்.

ஆனால் அமெரிக்க நிறுவனம் ஒன்று ஹோட்டல் கட்டுவதற்கு மண்டைதீவை தெரிவு செய்ததென்பதை அறிந்தபோது நாம் இவ்விடத்தில் எழுதியது பொய்யல்ல என்பது நிரூபணமாகியுள்ளது. அந்தளவில் மன ஆறுதல் அடையலாம்.

அதேநேரம் மண்டைதீவில் அமெரிக்க ஹோட்டல் அமைப்பது தொடர்பில் ஏற்படக்கூடிய சாதக, பாதக காரணிகள் பற்றி ஆராய்வது கட்டாயமானதாகும்.

அமெரிக்கா என்பதற்காக அதனைக் கை தட்டி வரவேற்க வேண்டும் என்ற தேவை எதுவும் கிடையாது.

மண்டைதீவில் அமெரிக்க நிறுவனம் ஹோட்டல் கட்டுவதில் மண்டைதீவு மக்களின் அபிப்பிராயத்தை பெற்றுக் கொள்வது அவசியமானதே.

அத்தகையதோர் அபிப்பிராயத்தை பெற்றுக் கொள்ளும் போது, அமெரிக்க ஹோட்டல் மண்டைதீவில் அமைக்கப்படுவதனால் மண்டைதீவில் ஏற்படக்கூடிய அபிவிருத்திப் பணிகள், கீழ்க் கட்டுமானங்கள், குடிநீர் வசதிகள் மற்றும் மின் வசதிகள், வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் தெளிவான விளக்கங்கள் அவசியம்.

மண்டைதீவு மக்கள் மீளக் குடியமர்ந்து இவ்வளவு வருடங்கள் ஆகியும் யுத்தத்தால் அழிந்துபோன வைத்தியசாலையை புனரமைக்க எந்தவித நடவடிக்கையையும் எடுக்காதவர்கள், உடைந்துபோன கடல் அணையை மீளக் கட்டி வயல் நிலங்கள் உவரடைவதைத் தடுக்க முடியாதவர்கள் இருக்கும் போது,

எழுந்தமானமாக அமெரிக்க ஹோட்டலை மண்டைதீவில் கட்டுவதால் ஏற்படக்கூடிய சாதக, பாதக விளைவுகளை மண்டைதீவு மக்களே ஆராய்ந்து ஆவன செய்யவேண்டும். இது அவர்களின் தலையாய கடமை.

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தங்களால் ஆளும் கட்சிக்கு பாதக நிலைமை ஏற்படும்

## ஜி.எச்.புத்ததாச தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தினால் ஆளும் கட்சிக்கு பாதகமான நிலைமைகள் ஏற்படக் கூடுமென கடுவெல பிரதேச சபையின் தலைவரும் பிரதேச சபை உறுப்பினர்களின் முன்னாள் தலைவருமான ஜி.எச்.புத்ததாச தெரிவித்துள்ளார்.

என்றாவது ஓர் நாள் அரசாங்கத்தின் திருத்தச் சட்டங்கள் ஆளும் கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உள்ளூராட்சி மன்றத் திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் முதல் தடவையாக ஆளும் கட்சி முக்கியஸ்தர் ஒருவர் பாதகமான விமர்சனத்தை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பல கட்சிகள் அங்கம் வகிப்பதாகவும் இதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதிக்கம் வலுக்குன்ற சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கீழ் மட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வலுவான ஆதரவு காணப் படுவதாகவும் புதிய திருத்தச் சட்ட மூலங்களின் ஊடாக அந்த ஆதரவு இழக்க நேரிடலாம் எனவும் இந்தப் புதிய தேர்தல் திருத்தங்களின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி கூடுதல் நன்மை அடையும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வலுவான கீழ் மட்டக் கட்டமைப்பைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி தொகுதிவாரி அடிப்படையில் போட்டியிடுவதனையே அதிகம் விரும்பும் என அவர் தெரிவித்துள்ளார்.

புதிய திருத்தங்களின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் பிரதேச மக்களுக்கு சேவையாற்றுவதில் சிக்கல் நிலைமை ஏற்படக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை உத்தேச உள்ளூராட்சி மன்றத் திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் பிரதேச சபைகளிடம் கருத்து கோரும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

# தாய்லாந்தில் கைதான இலங்கையர்கள் குறித்து தூதரக அதிகாரிகள் பேச்சுவார்த்தை

தாய்லாந்தில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப் பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் 130 பேரையும் தாய்லாந்துக்கான இலங்கைத் தூதரக அதிகாரிகள் நேரில் சென்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் இலங்கை திரும்ப விரும்பினால் அதற்கான சகல ஏற்பாடுகளையும் உதவிகளையும் செய்யத் தயாரென்று தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் இலங்கைக்குத் திரும்பிச் செல்லப்போவதில்லையென அவர்கள் மறுத்துவிட்டதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாய்லாந்து குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள பொலிசார், குடியிருப்புத் தொகுதிகளைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தி குடிவரவுச்சட்டத்தை மீறியவர்களைக் கைது செய்துள்ளனர். இதில் இலங்கைத் தமிழர்கள் 130 பேர் அடங்குவர். இவர்களுள் பலர் விசா காலாவதியாகி நான்கைந்து வருடங்கள் இருந்துள்ளனர். இதில் 34 பேர் பெண்கள் என்றும் பாங்கொக்கிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

தாய்லாந்து அதிகாரிகள் வழங்கிய தகவலை அடிப்படையாகக்கொண்டு இலங்கைத் தூதரக அதிகாரிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று இலங்கைத் தமிழர்களுடன் சந்திப்பை நடத்தியுள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள அனைவரும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் பதிவு செய்துகொண்டுள்ளனர். ஆனால் இவர்கள் அனைவரும் விசா சட்டத்தை மீறி உள்ளதாக தாய்லாந்து அதிகாரிகள் குறிப் பிட்டுள்ளனர்.

இலங்கை தமிழர்கள் 130 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தூதரகத்திற்குத் தகவல் வழங்கிய அந்நாட்டு அதிகாரிகள் அவர்கள் விசா சட்டத்தை மீறியிருப்பதாக கூறியுள்ளனர்.

அதேவேளை புலிகள் இயக்கத்துடன் தொடர்புபட்டவர்கள் இருக்கிறார்கள் எனக் குறிப்பிடவில்லையெனவும் பாங்கொக் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரி தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்கள் நாடு திரும்புவது தொடர்பில் தூதரக அதிகாரிகள் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# இத்தாலி, பிரான்ஸ் நாட்டு தூதுவர்கள் நியமனம்

இலங்கையின் சார்பில் இராஜதந்திர துறைகளில் பணியாற்றிய இருவருக்கு மீண்டும் இராஜதந்திர துறையில் பதவிகள் வழங் கப்படவுள்ளன.

தென்கொரியாவுக்கான இலங்கை தூதராக செயற்பட்ட ஜே.அசித்தா இத்தாலிக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

அதேநேரம் ஐக்கிய நாடுகள் சபையின் சுவிட்சர்லாந்து அலுவலகத்தில் நிரந்தர பிர திநிதியாக இருந்த தயான் ஜயதிலக்க பிரான்ஸ் நாட்டு தூதுவராக நியமிக்கப்படவுள்ளார். இந்த இரண்டு இராஜதந்திரதுறை பதவி யேற்பு களும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வருகின்றன. (ஸ்ரீ-2)

# ஐ.நா.சபையின் விசேட ஆலோசகராக கபீர்ஹாசிம்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத் துவம் மற்றும் புனரமைப்பு குழுக்களுக்கிடையே சமாதான மத்தியஸ்தராக செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் அவற்றில் இருந்து விலகி வெளிநாடு சென்றுள்ளார். இரண்டு மாதகாலம் அவர் ஆப்கானிஸ்தானில் தங்கியிருப்பார் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் விஷேட ஆலோ சகராகவே அவர் ஆப்கானிஸ்தான் சென் றுள்ளார். கட்சியின் ஒற்றுமைக்காக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பயனளிக்காததன் காரணமாகவே அவர் வெளிநாடு சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# பாபாவே நம் நிரந்தரத் துணைவன்

1969 ஆம் ஆண்டு கோதாவரி மாவட்டத்திலுள்ள அமலாபுரத்துக்கு எல்லாம் வல்ல ஸ்ரீ சத்ய சாயி பாபா விஜயம் செய்தார். பாபா செல்லும் வழி முழுவதும் அடியார்கள் குவிந்தபடி நின்று பகவானை வாழ்த்தி வணங்கினர். பகவானுடன் வேறு சிலரும் பயணம் செய்தனர். அமலாபுரம் செல்லும் வழியில் பாபா பயணித்த வாகனம் திடீரென நிறுத்தப்பட்டது. பாபா வாகனத்திலிருந்து இறங்கினார். இரண்டு பெண்களும் இரண்டு குழந்தைகளும் வயல் வெளியூடாக ஓடி வந்து கொண்டிருந்தனர். பாபா அவர்களைச் சுட்டிக்காட்டி, அவர்களால் பேருந்தினைப் பிடிக்க முடியவில்லை. அதனால் அவர்கள் கால்நடையாக விரைகின்றனர். போய் அவர்களை அழைத்து வாருங்கள் என்று தன்னுடன் வந்தவர்களிடம் தெரிவித்தார்.

அவர்கள் ஓடிப்போய் நடந்து சென்றவர்களை நிறுத்தி சாயி பாபா உங்களை வரும்படி அழைக்கின்றார் என்றனர். அவர்கள் நம்பவில்லை. நாங்கள் பாபாவை காணப்போய் கொண்டிருக்கின்றோம் என்று எரிச்சலுடன் கூடிய பதிலையிறுத்தனர். அப்போது பாபா அவர்கள் அருகே வந்து அங்கே ஏராளமான சனக் கூட்டம் இருக்கும் குழந்தைகளுடன் அசௌகரியத்துக்கு ஆளாவீர்கள் என்று கூறி நான் தான் சாயி பாபா நான் உங்களுக்காகத்தான் இங்கு நின்றேன் என பாபா புன்னகையுடன் கூறினார். வந்த இரு பெண்களும் மாமியும் மருமகளுமாவர். எனவே அத்தை என விழித்த அந்த இளம் விதவைப் பெண் அவர் படங்களில் இருக்கின்ற பாபாவைப் போல அப்படியே இருக்கின்றார் என்றாள். இருந்தும் அம்முதிய பெண்மணி நம்ப இயலாமல் பாபாவைக் குழப்பத்துடன் பார்த்தாள்.



அப்போது பாபா எனக்கு எல்லாம் தெரியும். உனது மகன் சொத்திற்காக கொல்லப்பட்டான். கவலைப்படாதே. நீதிமன்றத் தீர்ப்பு உனக்கு சாதகமாக இருக்கும். நான் உன்னிடம் கூறுவதற்காகவே இங்கு நின்றேன். வா இதனை எடுத்துக் கொள். அவ்வாறு கூறியபடி பண நோட்டுக்கள் அடங்கிய ஒரு முடிச்சினை அவளிடம் வழங்கி ஆளுக்கொரு அப்பிளையும் கொடுத்து காரில் ஏறிப்புறப்பட ஆயத்தமானார். அவர்கள் திகைத்து நின்றனர்.

பகவானே நம் நிரந்தரத் துணைவன். அவரைப்பற்றிக் கொள். உன் கஷ்டங்கள், அச்சங்கள் மறைந்துவிடும். மனமுருகி அழைத்தால் ஓடி வந்து விடுவார். உன் அனுபவத்தில் நீ உணரும் போது மற்றவர்களுக்கும் நல் வழிகாட்டியாய் இருப்பாய்.

ஜெய் சாயிராம்

# பயங்கரவாதம், கடற்கொள்ளையைத் தடுக்க சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்கள் அவசியம்

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்தல்



(ஹனோய்)

அதிகரித்து வரும் பயங்கரவாதம் மற்றும் கடற்கொள்ளைகளைத் தடுக்க சர்வதேச அளவில் ஒத்துழைப்பு தேவை என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி வலியுறுத்தியுள்ளார்.

நாடுகளின் பாதுகாப்பு, அமைதி மற்றும் வர்த்தகம் இவற்றுக்குப் பெரும் இடையூறாகவும், அச்சுறுத்தலாகவும் இவை விளங்குகின்றன. எல்லை கடந்த பயங்கரவாதம் இப்போது அனைத்து நாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இதைத் தடுக்க ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு தேவை என்று அவர் குறிப்பிட்டார்.

வியட்நாமின் தலைநகர் ஹனோயில் நடைபெற்ற முதலாவது ஆசியான் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் பேசுகையில் அவர் இக்கருத்தைத் தெரிவித்தார். 8 நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் இதில் பங்கேற்றனர். ஆசிய நாடுகள் அதிலும் குறிப்பாக தென்கிழக்கு ஆசிய நாடுகள் இத்தகைய சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அதிகரித்து வரும் பயங்கரவாதம், அதைத் தூண்டிவிடும் பிறநாட்டு அமைப்புகள், கணனி சார்ந்த அதிநவீன குற்றங்கள் உள்ளிட்டவை பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்குகின்றன. கப்பல்களைக் கடத்துவது அதிகரித்துள்ளது. ஏடன் வளைகுடா மற்றும் அதைச் சுற்றிய பகுதிகளில் கப்பல் கடத்தல் அதிகரித்துள்ளது இப் பிராந்திய நாடுகளுக்குப் பெரும் சவாலாக விளங்குகிறது.

இந்த இரட்டைச் சவாலைச் சமாளிக்க இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடனும் உலகின் பிற நாடுகளுடனும் இணைந்து செயல்பட இந்தியா தயாராகவே உள்ளது. எல்லை கடந்த இத்தகைய பயங்கரவாத செயல்களை ஒடுக்குவதில் நாடுகளிடையே ஒத்துழைப்பு அவசியம். தகவல் பரிமாற்றம் மூலம் வலுவான ஒத்துழைப்பை ஏற்படுத்த முடியும்.

கடற்கொள்ளையைத் தடுப்பதற்காக சர்வதேச கடல்சார் நிறுவனத்தின் விதிமுறைகளுக்கேற்ப மலாக்கா சந்திப்பில் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதே போல கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏடன் வளைகுடா பகுதியில் இந்திய கடலோரக் காவல்படை பாதுகாப்பு அளித்து வருகிறது.

கடற்படை பாதுகாப்பில் தகவல் பரிமாற்றம் மிகவும் முக்கியமானதாகும். இந்த விடயத்தில் அனைத்து நாடுகளும் தங்களது கடல் எல்லைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன்மூலம் வர்த்தகம், கடல் போக்குவரத்து பாதிப்பின்றி நடைபெறும்.

பொருளாதார வளர்ச்சியில் வர்த்தகம் மிகவும் முக்கியமானதாகும். அந்த வகையில் கடல்கொள்ளையத் தடுக்க முதலில் மலாக்கா கடல் சந்திப்பில் ஒப்பந்தம் போட்ட நாடு இந்தியா தான். இதன்மூலம் இப்பிராந்தியம் முழுவதும் பயனடைகிறது. பன்முக இராணுவ மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்த கூட்டு தீர்மானம் வரவேற்கத்தக்கது. இது இப் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை ஏற்படுத்த வழிவகுக்கும். ஐந்து முக்கியமான துறைகளில் கூட்டாக ஈடுபட இந்தியா ஆர்வமாக உள்ளது. அதற்கு முன்வரும் நாடுகளுடன் இந்தியா ஒப்பந்தம் செய்து கொள்ளவும் தயாராக உள்ளது என்றும் அந்தோனி கூறினார். (ஸ்ரீ-2)

## ஐ.நா. பொதுச் சபையில் இந்தியா- பாகிஸ்தான் மோதல்

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதிக் கொண்டன.

ஐ.நா. பொதுச் சபைக்கூட்டம் இப்போது நடைபெற்று வருகிறது. இதில் இந்தியாவின் சார்பில் காங்கிரஸ் எம்.பி.சரண் தாஸ் மகந்த் பேசினார். அப்போது, 'காஷ்மீர் இந்தியா வின் ஒரு பகுதி' என அவர் அடித்துக் கூறினார்.

'எங்களது எதிர்காலம் இந்தியாவுடன் தான்' என்ற தங்களது விருப்பத்தை காஷ்மீர் மக்கள் ஒவ்வொரு தேர்தலிலும் அதிகமாக வாக்களிப்பதன் மூலம் வெளிப்படுத்தி உள்ளனர் என்று அவர் கூறினார்.

இதைத் தொடர்ந்து, பாகிஸ்தான் தரப்பில் அந்நாட்டு பிரதிநிதி தஹீர் அன்டரபி பேசினார். ஐ.நா.சபையின் தீர்மானத்துக்கு ஏற்ப காஷ்மீரில் நியாயமாகவும் சுதந்திரமாகவும் தேர்தல் நடத்தப்படவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார். ஜம்மு, காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி அல்ல என்று அவர் தெரிவித்துள்ளார். அண்மைக்காலமாக காஷ்மீரில் பிரிவினைவாதிகள் போராட்டம் நடத்தி வருவதால் தைரியமடைந்த பாகிஸ்தான், சர்வதேச அரங்குகளில் காஷ்மீர் பிரச்சினையைத் தொடர்ந்து எழுப்பி வருவது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கர்நாடகாவில் எடியூரப்பா அரசு வெற்றி பெறுமா?

## இன்று பலப் பரீட்சை

(பெங்களூர்)

கர்நாடகாவில் பாரதீய ஜனதா அரசுக்கு ஆதரவு அளித்து வந்த 19 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவை வாபஸ் பெற்றதை அடுத்து கடந்த 11 ஆம் திகதி கர்நாடக சட்ட சபையில் பலப் பரீட்சை நடந்தது. அதற்கு முன்னதாக 16 எம்.எல்.ஏ.க்களை சபாநாயகர் இடைநிறுத்தம் செய் தார். பின்னர் வாக்கெடுப்பை நடத்தினார்.

கடும் குழப்பத்துக்கு இடையே நடந்த இந்த வாக்கெடுப்பில் பாரதீய ஜனதா அரசு வெற்றி பெற்றதாக சபாநாயகர் அறிவித்தார். ஆனால் எதிர்க்கட்சிகள் வாக்கு முறைப்படி நடக்க வில்லை என்று புகார் கூறினார்கள்.

சபாநாயகர் குரல் வாக்குமூலம் வாக்கெடுப்பை நடத்தியது தவறு. டிவிஷன் முறையில் வாக்கெடுப்பு நடத்தி இருக்க வேண்டும் என்று அவர்கள் குற்றஞ் சாட்டினார்கள் .

இது சம்பந்தமாக அவர்கள் ஆளுநர் பரத்வாஜை சந்தித்தும் புகார் கூறினார்கள். இதையடுத்து அவர் கர்நாடகாவில் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்தும் படி மத்திய அரசுக்கு சிபாரிசு செய்தார். ஆனால் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த மத்திய அரசு தயக்கம் காட்டி வந்தது. இந்த நிலையில் ஆளுநர் பரத்வாஜ் கடந்த திங்கட்கிழமை நடந்த வாக்கெடுப்பு செல்லாது என்று அறி வித்தார். மேலும் எடியூரப்பாவை இன்று மீண்டும் சட்ட சபையில் பெரும்பான்மை நிரூ பித்து காட்டும் படி உத்தரவிட்டார். இதை எடியூரப்பா ஏற்றுக் கொண்டார். இன்று 11 மணிக்கு சட்ட சபை கூட்டம் தொடங்குகிறது இதில் எடியூரப்பா தனது அரசுக்கு நம்பிக்கை கோரும் தீர்மானத்தை கொண்டு வருகிறார். அதன் மீது சபாநாயகர் டிவிஷன் முறையில் வாக்கெடுப்பு நடத்தி முடிவை அறிவிப்பார். இதில் அரசு வெற்றிபெறுமா ? என்பதை உறுதிப்படுத்த முடியாத நிலை உள்ளது. (ஸ்ரீ-2)




# ஐக்கிய நாட்டு பாதுகாப்பு சபையில் தற்காலிக உறுப்பினரானது இந்தியா

ஐக்கிய நாட்டுப் பாதுகாப்புச்சபையில் தற்காலிக உறுப்பு நாடாக இந்தியா தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஐ.நா பாதுகாப்பு சபையில் மொத்தமுள்ள 15 இடங்களில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் மட்டுமே நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ளன. மற்ற 10 நாடுகள் இரண்டு ஆண்டு கால சுழற்சி முறையில் இந்த சபையில் அங்கம் வகித்து வருகின்றன. இந்த சபையில் நிரந்தர அந்தஸ்து கேட்டு பிரேசில், ஜப்பான், இந்தியா உள்ளிட்ட நாடுகள் வற்புறுத்தி வருகின்றன.

இந்நிலையில் கடந்த 19 ஆண்டுகளுக்கு பின்னர் இந்த சபையில் இந்தியா மீண்டும் தற்காலிக உறுப்பு நாடாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆசிய நாடுகளின் சார்பில் கசகஸ்தானும் இந்தியாவும் இந்த முறை போட்டியிட்டன. ஆனால் இந்த ஆண்டு ஆரம்பத்தில் கசகஸ்தான் இந்த போட்டியிலிருந்து விலகிக் கொண்டதால் இந்தியா தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் 191 உறுப்பு நாடுகளில் 187 நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவாக வாக்களித்தன. ஆபிரிக்க நாடுகளின் சார்பில் தென்ஆபிரிக்காவும் தென்அமெரிக்க நாடுகளின் சார்பில் கொலம்பியாவும் ஐரோப்பிய நாடுகளின் சார்பில் ஜெர்மனியும் போர்த்துக்கலும் தேர்வாகியுள்ளன.



அடுத்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து இரண்டு ஆண்டு காலத்துக்கு இந்த நாடுகள் பாதுகாப்பு சபையில் உறுப்பு நாடாக இருக்கும். கடந்த 1992 ஆம் ஆண்டு முன்பு இந்தியா ஆறுமுறை ஐ.நா.பாதுகாப்பு சபையில் உறுப்பு நாடாக இருந்துள்ளது. அதன் பின் ஜப்பான் போட்டிக்கு வந்ததால் இந்தியாவால் பாதுகாப்பு சபையில் உறுப்பு நாடாக இயங்க முடியாமல் இருந்தது.

இந்தியாவுக்கான ஐ.நா.தூதர் ஹர்தீப்சிங் பூரி குறிப்பிடுகையில், ஐ.நா.உறுப்பு நாடுகளின் ஒவ்வொரு வாக்கையும் இந்தியாவுக்கு ஆதரவாக பெறுவதற்கு கடுமையாக உழைத்தோம் என்றார். (ஸ்ரீ-2)

# திருட்டை தடுக்கும் கருவி கண்டுபிடிப்பு; பெரம்பலூர் வாலிபர் சாதனை

(பெரம்பலூர்)

பூட்டிய வீட்டின் கதவை உடைத்து பொருட்கள் கொள்ளையடிப்பதை தடுக்கும் கருவியை பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார். பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தாலுகா புஜங்கராய நல்லூர் கிராமத்தை சேர்ந்தவர் ராஜசேகர்-தமிழ்ச்செல்வி தம்பதிகளின் மகன் கலைமணி (வயது 26) பத்தாம் வகுப்பு வரை படித்து விட்டு பம்புசெட் மேட்டார் பழுது பார்க்கும் எலக்ட்ரோனிக் வேலையில் ஈடுபட்டு வந்தார்.

எதையாவது சாதிக்க வேண்டும் என முடிபு செய்தார். அதன்படி கையடக்கத் தொலைபேசி மூலம் ஏதாவது கருவியை தயாரிக்க வேண்டும் என யோசித்தார். பெரம்பலூர் மாவட்டத்தில் பூட்டிய வீட்டின் கதவை உடைத்துப் பொருட்களை கொள்ளையடித்து செல்லும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதை நாளிதழில்களின் வாயிலாக தெரிந்து கொண்ட கலைமணி திருட்டை தடுக்கும் கருவியைக்கண்டு பிடிக்க முடிபு செய்தார்.

இவரது திட்டத்தின்படி ஒரு தொலைபேசியை விலைக்கு வாங்கி அதை ஒரு பாக்ஸில் பொருத்தி காந்தம் இரும்பு ஆகியவற்றின் உதவியுடன் தொலைபேசியில் இருந்து வயர் இணைத்து கதவில் காந்தம் மற்றும் இரும்புத்தகட்டைப் பொருத்தி இதில் தனது நம்பரை டயல் நம்பராக பதிவு செய்து இயக்கி பார்த்தார்.

கதவைத் திறந்த உடன் ஏற்கனவே பதிவு செய்திருந்த தனது இலக்கத்துக்கு தொலைபேசி [illegible] வந்தது திருட்டை தடுக்கும் [illegible] புதிய கருவியை கண்டுபிடித்துள்ள கலைமணி இது குறித்து கூறியதாவது, கதவில் கைத்தொலைபேசியை பொருத்திய பின் இலக்கத்தை டயல் செய்து விட்டு கதவை பூட்டி விட்டு சென்றுவிடலாம். யாரேனும் கதவைத் திறந்தால் நாம் எங்கு இருந்தாலும் நமது கைத்தொலைபேசிக்கு அழைப்பு வரும்.

இதன் மூலம் திருடர்கள் வீட்டில் புகுந்துவிட்டார்கள் என பொலிஸ் மற்றும் பக்கத்து வீட்டினருக்கு தகவல் தெரிவித்து திருட்டை தடுக்கலாம்.

மேலும் விவசாயக் குடும்பத் தைச் சேர்ந்த நான் கடந்த ஆகஸ்ட் மாதத் தில் ஒருநாள் எங்களது வயலுக்கு தண்ணீர் பாய்ச்சச் சென்றிருந்தேன். பம்புசெட் மோட்டாரை போட்டுவிட்டு வயல் வேலையில் ஈடுபட்டிருந்தேன்.

பின்னர் சிறிது நேரத்தில தண்ணீர் பாய்ச்சிய வயலை வந்து பார்த்தபோது தேவையான அளவைவிட அதிக அளவு தண்ணீர் வயலில் பாய்ந்து இருந்தது. இதைப் பார்த்த நான் வயலில் தேவையான அளவு தண்ணீர் உள்ளதைக் கண்டறியும் கருவியையும் கண்டு பிடித்துள்ளேன்.

திருட்டைக் கண்டுபிடிக்கும் கருவியை சிறிது மாற்றம் செய்து இந்த கருவியை வயலில் எந்த இடத்தில் தண்ணீர் சென்றடைய வேண்டுமோ அந்த இடத்தில் கருவியை வைத்து நம்பரை டயல் செய்து விட்டால் தண்ணீர் அந்த இடத்தை வந்தடைந்தவுடன் கைத்தொலைபேசிக்கு அழைப்பு வரும் என்று (ஸ்ரீ-2)

# டெஸ்ட் தொடரை முழுமையாக கைப்பற்றியது இந்திய அணி

புஜாரா, டெண்டுல்கரின் சிறப்பான ஆட்டம் கைகொடுக்க இந்திய அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக் கில் முழுமையாக கைப்பற்றியது.



இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 டெஸ்ட், 3 ஒரு நாள் போட்டிகள்கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற இந்திய அணி டெஸ்தொடரில் 1:0 என்ற கணக் கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில்இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த சனிக்கிழமை பெங்களூரில் ஆரம்பமாகியது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 478 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 495 ஓட்டங்களை எடுத்தது.

அடுத்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 202 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 223 ஓட்டங்களை எடுத்துசகல விக்கெட்டுக் களையுமிழந்து இந்திய அணிக்கு வெற்றி இலக்காக 207 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதில் ஹயூரிச் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் சகீர்கான், பிரஜன் ஓஜா ஆகியோர் தலா 03 விக்கெட்டுக்களையும், சிறிசாந்த், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 02 விக் கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 207 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வீரேந்திர சேவாக் 07 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக விஜயுடன் இணைந்த அறிமுக வீரர் புஜாரா சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார்.

இந்த ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி மீண்டெழுந்தது.

இதில் முரளி விஜய் 45 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 37 ஓட்டங்களை எடுத்து வோட்ஷனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்க இந்திய அணி 89 ஓட்டங்களை எடுத்து 2-வது விக்கெட்டையிழந்தது.

அடுத்து வந்த சச்சின் டெண்டுல்கர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் புஜாரா தனது அறிமுகப் போட்டியில் முதலாவது அரைச் சதத்தைக் கடந்தார்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 57 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது புஜாரா 89 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 72 ஓட்டங்களை எடுத்து ஹயூரிச்சின் பந்தில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த டிராவிட் நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் டெண்டுல்கர் அரைச்சதம் கடந்தார்.

இந்நிலையில் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 45 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 207 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் சச்சின் டெண்டுல்கர் 77 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 53 ஓட்டங்களையும் ராகுல் டிராவிட் 53 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹில்பென் ஹயூஸ் ஹயூரிச், வோட்ஷன் ஆகியோர் தலா ஒருவிக்கெட் டை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் இந்திய அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

இப்போட்டியில் முதல் இன்னிங்ஸில் இரட்டைச்சதம், இரண்டாவது இன்னிங்ஸில் அரைச்சதம் என அடித்து அசத்தி இந்திய அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த சச்சின் டெண்டுல்கர் ஆட்டநாயகனாகத்தெரிவானதுடன்தொடர் நாயகன் விருதையும் வென்றார்.

# பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி-2010

## உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். அணி 2 ஆம் இடம்



முகாமையாளர் : க.கணேசநாதன், பயிற்றுவிப்பாளர் :மா. இளம்பிறையன்

அணி உறுப்பினர்கள் : க. பிரசன்னா, ஓ.பிரபாகரன் பிகராடோ, ச.அமிராஜ், ச.சுதர்சன், கி.சுதாகரன், ஸ்ரீ.பிரதீஸ், செ.அகீபன், ஸ.மயுரின் கலிஸ்ரர், ச.றஜீன், இ.ஜீவகுமார், த.திரோன் கொடுதோர், சி.மயூரன், நீ.றொக்ஸன், ஜோ.ஜோய் ராஜ்மென், இ.விஜிதரன், அ.நிதர்சன், அ.சிறீநிவாஜ், ம.சந்திரகுமார்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி 2010 ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் ஒக்டோபர் மாதம் 01, 02, 03, 04ஆம் திகதிகளில் கொழும்பு சாளிகா மற்றும் றீட்அவனியு மைதானங்களில் நடத்தப்பட்டது.

மேற்படி போட்டியில் இறுதி ஆட்டம் வரை முன்னேறி இறுதி ஆட்டத்தில் ஸ்ரீ ஜெவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் மோதி இறுதி ஆட்டம் முடிபடையும்போது 1:1 என்ற சமனிலையில் முடிபடைந்து பின்னர் ஒவ்வொரு அணிக்கும் 5 தண்டனை உதைகள் வழங்கப்பட்டு 2:3 என்ற அடிப்படையில் யாழ். பல்கலைக்கழகம் 2 ஆம் இடத்தை பெற்றுக் கொண்டது.

முதலாவது சுற்றில் யாழ்.பல்கலைக்கழக அணியானது கொழும்பு அழகியற் பல்கலைக்கழகத்துடன் மோதி 6:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. இதனைத் தொடர்ந்து இராஜரட்டை பல்கலைக்கழகத்துடன மோதி 1:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. தொடர்ந்து காலிறுதி ஆட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக அணியானது றுகுணு பல்கலைக்கழகத்துடன் மோதி 4:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. தொடர்ந்து அரையிறுதி ஆட்டத்தில் களனி பல்கலைக்கழகத்துடன் மோதி 3:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

மேற்படி போட்டிகளில் யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட மாணவன் செல்வன் எஸ்.எம்.கலிஸ்ரரினின் திறமையான விளையாட்டு யாழ். பல்கலைக்கழக அணி போட்டிகளில் வெற்றிபெறுவதற்கு வழிகோலியது.

## கூடைப்பந்தாட்டப் போட்டியில் பெண்கள் அணி மூன்றாமிடம்



முகாமையாளர் : க.கணேசநாதன், பயிற்றுவிப்பாளர் : திருமதி ஜெ.சரவணபவஜயர்

அணி உறுப்பினர்கள் : ஏ.சிறோமி, பி.ஜனனி (தலைவர்), பி.மயூரி, எஸ்.பிரேமலதா, கே.சயானி, என்.தரங்கினி, எஸ்.கௌசிகா, கே. கீர்த்திகா, எஸ்.பிரிந்தா, எஸ்.யாழினி, கே.விஸ்வேதிகா, எஸ்.தர்சிகா.

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி 2010 ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் ஒக்டோபர் மாதம் 03, 04, 05, ஆம் திகதிகளில் சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடத்தப்பட்டது.

மேற்படி போட்டியில் காலிறுதி ஆட்டம் வரை முன்னேறி காலிறுதி ஆட்டத்தில் வயம்ப பல்கலைக்கழகத்தை எதிர்த்து விளையாடிய யாழ்.பல்கலைக்கழக பெண்கள் அணி 26:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

அரையிறுதி ஆட்டத்தில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினை எதிர்கொண்ட யாழ்.பல்கலைக்கழக பெண்கள் அணி 45:25 என்ற புள்ளி அடிப்படையில் தோல்வியைத் தழுவிக்கொண்டமையினால் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தை எதிர்த்து மூன்றாமிடத்துக்காகப் போட்டியிட்டது. இதில் யாழ். பல்கலைக்கழக அணி மிக சிறப்பாக விளையாடி 34:16 என்ற புள்ளி அடிப்படையில் 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

## பளு தூக்கும் போட்டியில் 2 பதக்கங்கள்

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கான பளுதூக்கும் போட்டி 2010 ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் ஒக்டோபர் மாதம் 04 ஆம் திகதி கொழும்பு றிட்அவனியு இல் அமைந்துள்ள இலங்கைப் பளுதூக்கும் சம்மேளன உள்ளக அரங்கில் நடத்தப்பட்டது.



மேற்படி போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியின் எஸ்.பிரசாத் 85 கிலோ எடைப் பிரிவில் 2 ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். யாழ். பல்கலைக்கழக அணியின் உபதலைவர் எஸ். சிவசொரூபன் 69 கிலோ எடைப்பிரிவில் 3 ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார்.

# அனைத்துப் பல்கலைக்கழக தலைவர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அனைத்துப்பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் ஏற்பாட்டாளர் உதுல் பிரேமரட்ன கோப்பாய் பகுதியில் வைத்து தாக்கப்பட்டுள்ளார்.

அவரது பணப்பை மற்றும் கமரா என்பனவும் பறித்துச் செல்லப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயவும் அது தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தவும் உதுல் பிரேம ரட்ண யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார்.

அவரது பயணத்தை நிறைவு செய்து விட்டு கொழும்பு திரும்பிக் கொண்டிருக்கும் வழியிலேயே அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலின் போது தனது பெறுமதியான மொபைல் போன், கமரா மற்றும் பயணப்பை என்பவற்றைப் பறிகொடுத்துள்ள அவர் தாக்குதல் மேற்கொண்டவர்கள் தனது மொபைல் போன் மற்றும் கமரா என்பவற்றைப் பறித்துச் செல்வதையே பிரதான நோக்கமாக கொண்டிருந்தது போன்று தென்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். (எ-1)

# போரூட் நிறுவனப் பணிப்பாளர் நாடுகடத்தப்படவுள்ளார்!

(கொழும்பு)

போரூட் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் பணிப்பாளர் நாடு கடத்தப்பட உள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயற்பட்டதாக போரூட் அமைப்பின் பணிப்பாளர் ஆனே பேனுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளது.

போரூட் அமைப்பின் அண்மைக்கால நடவடிக்கைகள் குறித்து புலனாய்வுப் பிரிவினர் தீவிர கவனம் செலுத்தி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் போரூட் காரியாலயத்தில் ஏற்றப்பட்டிருந்த இலங்கைத் தேசியக் கொடியை இறக்கிய குற்றத்திற்காக மற்றுமொரு வெளிநாட்டு உயரதிகாரி நாடு கடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜனாதிபதியின் செயலகத்தினால் விடுவிக்கப்படும் அறிவுறுத்தலுக்கு அமையவே செயற்பட வேண்டுமென அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இறுதி ஆட்டமும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்திய துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதி ஆட்டங்களும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

துடுப்பாட்ட இறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யா/மத்திய கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை தெரிவு செய்வதற்கான போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் மகாஜனக் கல்லூரியை எதிர்த்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியும் மோதவுள்ளன. மூன்றாமிடத்துக்கான போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணி மோதவுள்ளது.

மின்னொளியில் நடைபெறும் உதைபந்தாட்ட இறுதி ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும் மோதவுள்ளன. (ச-3)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அரச முகாமை உதவியாளர் சேவைகளில் அதிஉயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் எழுத்துப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி 2010.01.01 ஆம் திகதிக்கு முந்திய 5 ஆண்டு காலப்பகுதிக்குள் முனைப்பானமற்றும் திருப்திகரமாக சேவையாற்றி உள்ள மத்திய அரசைச் சேர்ந்த அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு 1 இல் உள்ள அலுவலர்களும் குறைந்த பட்சம் சேவையில் 08 ஆண்டுகளுக்கு குறையாத முனைப்பான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு 2 இல் உள்ள அலுவலர்களும் அரச முகாமை உதவியாளர் சேவையில் 1 ஆம் 2 ஆம் வகுப்புக்களிலுள்ள பட்டதாரி அலுவலர்களும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை யுடையவர்கள் ஆவர்:

பரீட்சைக்கட்டணம் ரூபாய் 400 ஐ அண்மித்துள்ள மாவட்டச் செயலகம்/ கச்சேரி / பிரதேச செயலகத்துக்கு செலுத்த வேண்டும். பணம் செலுத்தியமைக்காக பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகம் இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2010.11.16 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்களை வலம்புரியில் பார்வையிட முடியும். (ச-3)

# யாழில் சிங்கள மக்களின்...

பேச்சாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 12 நாட்களாக குறித்த மக்கள் இவ்வாறு தற்காலிகமாக யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளனர்.

போர் நிறைவடைந்து ஓராண்டு கழிந்துள்ள நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள மக்கள் எவரதும் அழுத்தங்களுக்கு அஞ்சி யாழ்ப்பாணத்திற்கு செல்லவில்லை.

போர் இடம்பெற்றகாலத்தில் வடக்கு கிழக்கில் வாழ்ந்து வந்த ஒரு இலட்சத்து 65 ஆயிரம் சிங்கள மக்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

சிங்கள மக்களை பிரதேசங்களிலிருந்து வெளியேற்றுவதற்காக விடுதலைப் புலிகள் பாரிய படுகொலைகளை மேற்கொண்டனர். 246 படுகொலைச் சம்பவங்களில் சுமார் 5 ஆயிரத்து 300 பேர் உயிரிழந்துள்ளனர்.

போர் காரணமாக அதிகளவான தமிழ் முஸ்லிம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாகவும் அந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கு காட்டப்படும் முனைப்பு சிங்கள மக்களை மீள்குடியேற்றுவதற்கும் காட்டப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியூதீன் முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றிய போதிலும் ஒரு சிங்கள குடும்பத்தையேனும் குடியேற்றவில்லை என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் குற்றம் சுமத்தியுள்ளதாக சிங்கள இணையமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிங்கள மக்கள் தங்கியிருந்த வீடுகளில் புலிகளின் மாவீரர் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

காணி உரிமையை கோரி யாழ்ப்பாணம் சென்றுள்ள சிங்கள மக்களின் சுக துக்கங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே பங்கேற்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# சரத்தின்...

குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான தந்திகளை அனுப்பி வைக்குமாறு ஜனநாயகத்துக்கான மக்கள் அமைப்பு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக அனைத்து வழிகளிலும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-5)

# ஐ.நா.சபையின் நிரந்...

பிராயத்தை கொண்டிருந்தார். அதன் காரணமாக ஜனாதிபதிக்கும் அவருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் காரணமாக கடந்த வருடம் அவரது பதவி பறிக்கப்பட்டது.

ஆயினும் அவரது சேவை தற்போதைய நிலையில் அத்தியாவசியமாக தேவைப்படும் காரணத்தால் அவர் மீண்டும் வெளிவிவகார அமைச்சின் பணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

தற்போதைக்கு பிரான்சில் தூதுவராக இருக்கும் லயனல் பெர்னாண்டோ விரைவில் ஓய்வு பெறவுள்ள நிலையில் அவரது இடத்துக்கு தயான் ஜெயதிலக நியமிக்கப்படவுள்ளார்.

அத்துடன் இத்தாலியில் இருக்கும் தற்போதைய இலங்கைத்தூதுவர் ஹேமந்த வர்ணகுலசூரிய அடுத்தமாதம் தனது பணியை நிறைவு செய்யவுள்ள நிலையில் அவரது இடத்துக்கு கொரியாவுக்கான முன்னைநாள் தூதுவராக கடமையாற்றிய அசித பெரேரா நியமிக்கப்படவுள்ளார்.

சர்வதேச மட்டத்தில் வலுத்து வரும் புலம்பெயர் தமிழரின் அரசியல் செயற்பாடுகளை முடக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் முதன்மைப் பணியாகும் என்றும் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-5)

# நாடாளுமன்ற பதவி...

சுனில் ஹந்துன்னெத்தியின் பெயர் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் தமது நாடாளுமன்ற உறுப்புரிமை நீக்கப்பட்டமைக்கு எதிராக ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால தடையாணை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தாம் நாடாளுமன்றத்துக்கு சென்றுவாக்களிக்கவும் தமது சிறப்புரிமையையும் பாதிப்பின்மையையும் உறுதிப்படுத்தி தமக்கு இந்த அனுமதியை வழங்க வேண்டும் என அவர் தமது மனுவில் கோரியுள்ளார்.

முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்எஸ்.பி. திஸாநாயக்க, நீதிமன்றத்தை அவமதித்த குற்றம் சுமத்தப்பட்டு குற்றவாளியாக இனங்காணப்பட்டார்.

எனினும் அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமையை நீக்குவதற்கு நாடாளுமன்ற செயலாளர் தேர்தல் செயலாளருக்கு அறிவிக்கவில்லை என்ற காரணத்தையும் சரத் பொன்சேகா தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தமக்கு எதிரான முதலாவது இராணுவ நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக சரத் பொன்சேகா தாக்கல் செய்த வழக்கில் நேற்று மூன்று நீதியரசர்களில் ஒருவர் வெளிநாடு சென்றதன் காரணமாக ஒக்ரோபர் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதனைத்தவிர அனோமா பொன்சேகா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவின் விசாரணையும் ஒக்ரோபர் 25ஆம் திகதி மேன் முறை யீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ச-5)

# சட்ட விரோத சுவரொட்...

கொடி விவகார வழக்கில் சாட்சியம் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைவதற்கு வருகை தந்த விடுதலைப்புலிகள் அமைப் பைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் உத்தரவின் பேரில் சுட்டுக்கொல்லப்பட்டதாக முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா கூறியதாக சண்டே லீடர் பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டவழக்கின்விசாரணையே கொழும்பு மேல்நீதிமன்றத்தில்நடைபெறுகின்றது. (ச-5)

# நத்தை வேகத்தில் மீள்...

இது குறித்து சுமந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளதாவது, இடம் பெயர் மற்றும் மீள்குடியேற்றம் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யோசனைத் திட்டங்களை முன்வைத்துள்ள போதிலும் அவை நடைமுறை படுத்தப்படுவதில்லை.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நத்தை வேகத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இந்த விடயம் குறித்து ஜனாதிபதியிடம் தாம் கருத்துக்களை முன்வைக்கவுள்ளதாகவும் அதற்கு முன்னர் மீள்குடியேற்ற மக்கள் பிரச்சினைகள் குறித்து அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இடம் பெயர் மற்றும் மீள்குடியேற்ற மக்களின் பிரச்சினைக்கு தீர்வுக் காண்பதற்கான விசேட பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

மீள்குடியேற்ற நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு குழுவொன்றை நியமிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இதுவரையில் பதில் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)


## நியூ கோல்டன் ஸ்ராரின் விசேட சேவைகள் 2010

1. பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகள் சிறந்த முறையில் கணனியில் வடிவமைப்பு செய்து கொடுக்கப்படும்.
2. குறைந்த கட்டணத்தில் டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் மிகத்துல்லியமான போட்டோ பிரதியாக்கம் செய்து கொடுக்கப்படும். [Photocopy)
3. A 3 கலர் போட்டோ கொப்பி
4. ஆய்வுக்கட்டுரைகள் சிறந்த முறையில் புத்தக உருவில் கட்டி [Binding] கொடுக்கப்படும்.
5. பாடசாலை உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். [பேனா, பென்சில், கொப்பி]

226, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொலைபேசி:0212226951 0779522444

(2673)

## தேவை

❁ யாழ்.நகரிலுள்ள அலுவலகம் ஒன்றிற்கு போட்டோ பிரதி செய்யக்கூடியவர் தேவை (பெண்)(பழகவிரும்புபவர்களும்)
❁ கணனி அறிவு மேலதிக தகைமை
தொடர்பு: 0718474325

(2675)

## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் 01 கோழிக்குஞ்சு விநியோகிக்கப்படும். முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
➢ சங்கீத் களஞ்சியம் பொன்னாலை வீதி, மானிப்பாய்.
➢ லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் மானிப்பாய்வீதி, ஆறுகால்மடம்.
➢ கிருஷ்ணா ஸ்ரோர்ஸ் குளப்பிட்டி சந்தி, கே.கே.எஸ்.வீதி.
தொடர்புகளுக்கு: 0728039327


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.